வம்சத்தில் சந்தனு என்னும் பெயருடன் பிறக்கப்போகிறாய். அந்த சரீரத்திலும் கங்கை தேவதாரூபத்துடன் உனக்குப் பத்னியாகப்போகிறாள். நான் உன்னை அடங்கு என்று சொன்னவுடன் நீ அடங்கி ஒடுங்கிப்போனதால் உனக்கு சந்தனு என்னும் பெயர் ஏற்படப்போகிறது. என்றிவ்வாறு சதுர்முகன் சொல்லவும் வருணபகவான் முதல் ஜென்மத்தில் பகவத்பக்தனான மகாபிஷக் என்னும் அரசனாய்ப்பிறந்தார். அந்த மகாபிஷக் ராஜன் இப்பிறப்பிலும் வெகுகாலம் பூமியை ரக்ஷித்து கடைசியில் சரீரத்தைவிட்டு பிரம்மாவின் சபைக்குப் போய்ச்சேர்ந்தார். அங்கு தேவர்களின் கூட்டத்தில் வீற்றிருக்கும்பொழுது அவருடைய பத்னியான கங்காதேவி அங்குவந்தாள். அவள் உடுத்திருந்த வஸ்திரம் விலகியது. அச்சமயம் நிர்வாணமாயுள்ள ஸ்திரீயைப் பார்க்கலாகாதென எல்லாதேவர்களும் தலைகுனிந்துகொண்டிருக்க மகாபிஷக் ராஜனாகிய வருணன்மட்டில் ஆசை மேலிட்டு அவருடைய பத்னியான கங்கையைப்பார்த்துக்கொண்டிருந்தார். அதைக்கண்டுவிட்டு சதுர்முகன் நான் உனக்கு பூர்வம் சாபங்கொடுத்தபடி நீ சந்தனுவென பூமியில் சீக்கிரம் ஜனிப்பாய் என்று சாபங்கொடுத்தார். இவ்வாறு சதுர்முகனால் சொல்லப்பட்ட வருணபகவான் அந்தசாபத்தின் உத்தரக்ஷணமே ப்ரதீபராஜனால் சந்தனுசக்ரவர்த்தியெனப் பிறந்தார். சந்தனு சக்ரவர்த்தி கங்கையை தன்னுடைய பத்தினியாக அடையப் பெற்று அவளுடன் வெகுகாலங்கூடி சந்தோஷமடைந்தான்.

## பீஷ்மாசாரியாளின் வரலாறு.

அஷ்டவஸுக்களில் எட்டாவதுவஸு த்யு என்னும் வஸு ஆவார். அவருக்கு வராங்கி என்னும் பத்னியிருந்தாள். அந்த வராங்கிதேவிக்கு வராங்கி என்ற அதேபெயர்கொண்டவளான ஸுவிந்த ராஜனின் பாரியை பூமியில் சிநேகிதியாக இருந்தாள். தன்னுடைய சிநேகிதியை ஜராமரணமில்லாமல் செய்யவேண்டி, வஸுபத்னியான வராங்கி, வசிஷ்டருடைய நந்தினி என்னும் காமதேனு அமிர்தத்தைக்கறப்பதாயும் அதை அருந்தினால் தன்

சினேகிதிக்கு ஜராமரணமில்லாமற்போகுமென்றும் ஆகவே அந்த காமதேனுவைப்பிடித்துக் கொண்டுவரவேண்டுமென்றும் தன்னுடைய பர்த்தாவான த்யுஎன்னும் வஸுவை வற்புறுத்தினாள். இவ்வாறு தனது பத்னியால் பிரேரிபிக்கப்பட்ட த்யு என்னும் வஸு ஸ கோ த ர சி னே க த் தா ல் அவருடன்வந்த மற்ற ஏழுவஸு தேவதைகளுடன்போய் வசிஷ்டரின் காமதேனுவை கயிறுகளால் கட்டினர். உடனே பிரம்மதேவன் வசிஷ்டரிடம் பிரவேசித்து அஷ்டவஸுக்களுக்கு சாபமிட்டனர். "என்னுடைய காமதேனுவை அபகரிப்பதென்னும் அதர்மத்தில் நீங்கள் பிரவித்திருப்பதால் சீக்கிரமே மனுஷ்ய ஜன்மாவை அடையுங்கள். நீங்கள் யாரிடம் சினேகபாவங்கொண்டு தர்மமார்க்கத்தினின்றும் நழுவினீர்களோ அந்த த்யு என்னும் வஸு உங்கள் எல்லோர் ஆயுளையுமடையட்டும். மற்ற ஏழு வஸுக்களும் சீக்கிரமே மானிடப்பிறப்பிலிருந்து விலகட்டும். இந்த த்யு என்பவனை எந்த வராங்கிதேவி இந்த குச்சிதமான வழியை கடைபிடிக்கும்படி பிரேரிபித்தாளோ, அவள் மனுஷ்யலோகத்தில் அம்பா என்று ஜனித்து, அச்சமயம் அந்த ஜன்மாவில் அவளுக்கு கணவனில்லாமற்போய், பிறகு அவள் அந்த ஜன்மத்தை தொலைத்து, மறுபிறப்பில் ஆணுகமாறி, இவளுடைய சொந்த கணவனான இந்த த்யு என்பவனைக் கொல்வதற்கு அவளே காரணமாகட்டும். இந்த த்யு என்னும் வஸு மனுஷ்யலோகத்தில் நித்யபிரம்மசாரியாகவே இருக்கட்டும். ஸதிபதிகளுக்குள் மகத்தான விரோதமுண்டாகட்டும். இந்த த்யு என்னும் வஸு இவ்வாறு பீஷ்மாசாரியாகப்பிறந்து பாணப்படுக்கையில் படுத்திருந்து எட்டுமடங்கு கர்பவாஸதுக்கம் எவ்வளவு உண்டோ அதை அனுபவிக்கட்டும். அந்த பீஷ்மாசாரியார் ஆயுதங்களால் பலவகையாய்ப் பிளக்கப்பட்டு எட்டுமடங்கு மரணதுக்கம் எவ்வளவு உண்டோ அவ்வளவு சங்கடத்தை அடையட்டும்; என்றிவ்வாறு வசிஷ்டர் அஷ்டவஸுக்களுக்கு சாபம்கொடுக்கவும் அஷ்டவஸுக்கள் வசிஷ்டரிடம் சதுர்முகன் பிரவேசித்திருப்பதை அறிந்து காமதேனுவை அவிழ்த்துவிட்டு நமஸ்கரித்தனர். மனுஷ்யர்களின் வீரியத்தாலுண்டான கர்பத்தை நாங்கள் அடைய



மாட்டோம். இந்த த்யு என்னும் வஸு பீஷ்மாசாரியாராய்ப் பிறந்து ஸர்வக்ஞனும் கீர்த்திமானுமாகட்டும். மகா அஸ்திரங்களை அறிந்தவனாகட்டும். தங்கள் அம்சம் பெற்றவனாகட்டும். இதர எங்கள் ஏழுபேர்களின் பலமும் அவனுக்கு வரட்டும்; என்றிவ்வாறு அவர்கள் கேட்டுக்கொள்ள நீங்கள் கேட்டுக்கொண்டபடியே ஆகட்டுமென்று வசிஷ்டரில் பிரவேசம் செய்திருந்த சதுர்முகன் சொன்னபிறகு அஷ்டவஸுக்கள் கங்காதேவியிடம் வந்தனர். கங்கையே! உன் வயிற்றில் நாம் ஜனிக்கப்போகிறோம். எங்களை சீக்கிரமே கொன்றுவிடு என்று அஷ்டவஸுக்கள் கங்கையைப்பார்த்து பேசினர். இவ்வாறு கூறப்பட்ட கங்கை நான் உங்களைக் கொன்றாலும் அதன்நிமித்தமான பாபம் என்னை அணுகலாகாது. நான் உங்கள் விசுவாசத்திற்கு பாத்திரமாக இருக்கவேண்டும். எனக்கு ஓர் பிள்ளை தீர்க்காயுஷ்மந்தனாய் இருக்கவேண்டுமென்று வரத்தைக்கேட்டுக்கொண்டாள். அந்த வஸுதேவதைகள் அவ்வாறே வரத்தையளிக்கவும் கங்கை சந்தனுவை அடைந்து அவரால் இந்த எட்டு வஸு தேவதைகளையும் பிரஸவித்தாள். சந்தனு பிறப்பதற்கு முன்னமேயே கங்கை இந்த அஷ்டவஸுக்களை கொல்வதில் தனக்கு விக்னமேற்படாதிருக்க வேண்டுமென்ற இச்சையுடன் சந்தனுவின் தந்தையான ப்ரதீபராஜன் தவம் செய்துகொண்டிருக்கையில் ராஜனுக்கு ஆசையில்லாதிருக்கும்போது அவனுக்கு மருமகளாகவேண்டுமென்ற இச்சையால் மோசக்கருத்துடன் ப்ரதீபராஜனின் வலது தொடையின்மீது ஓர் காமுகஸ்திரீபோல்வந்து உட்கார்ந்தாள். இதைக்கண்டுவிட்டு "ப்ரதீபராஜன் பெண்ணே! என்னுடைய மகனுக்கு நீ பத்னியாவாய்; ஏனெனில் நீ என்னுடைய வலது தொடையில் உட்கார்ந்துவிட்டாய், வலது தொடை மருமகளும் மகளும் உட்காரும் ஸ்தானமென்றும் இடது தொடை பத்னியின் ஸ்தானமென்றும் ஸ்மிருதிகளில் சொல்லப்படுகிறது." என்றிவ்வாறு ப்ரதீபராஜன் கன்னிகையின் உருவத்துடன் வந்த கங்கையைப்பார்த்துப்பேசினார். "ப்ரதீபராஜனே! உன்னுடைய மகன் என்னை விவாகம் செய்துகொண்டாரென்றால், நீ யார் என்று என்னை கேட்கலாகாது. நான் தகாதகாரியங்களைச்செய்

தாலும் என்னை தடுக்கலாகாது. நான் செய்யும் காரியங்களுக்கு காரணத்தை எப்பவும் கேட்கலாகாது. உம்முடைய குமாரர் இந்த மூன்று காரியங்களில் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்துவிட்டாலும் உம்முடைய குமாரனை விட்டுச்செல்வேன்.'' என்றிவ்வாறு கங்கை ப்ரதீபராஜனைக்கண்டு பேசினாள். ப்ரதீப ராஜனும் அப்படியே ஆகட்டுமென பதிலளித்தார். உம்முடைய குமாரனான சந்தனு சக்ரவர்த்திதான் என் கணவனாக நிச்சயித்திருக்கிறேன். வேறுயாரையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கங்கை நிச்சயம் செய்ததன்நிமித்தம் ப்ரதீபராஜன் இனிதனக்கு மருமகளாகப்போகும் கங்கை கூறிய வார்த்தைகளை ஆதியோடந்தமாய் அவருடைய இளையகுமாரனான சந்தனுவிட மறிவித்தான். பிறகு அவ்வாறே கங்கை சந்தனுவை விவாகம் செய்துகொண்டாள். அந்த சந்தனுவால் கங்கை எட்டு பிள்ளைகளை, கிரமமாய் ஈன்றெடுத்தாள். ஏழுபிள்ளைகளான வஸுதேவதைகளை அவர்கள் ஜனித்தவுடன் அவர்களின் கழுத்தைத்திருகி தன் ஜலத்தில் விட்டெறிந்து கொன்றுவந்தாள். பிறகு வருணலோகத்திற்குச் சென்றுவிட அபிப்ராயப்பட்டு எட்டாவது குழந்தையைக் கொல்பவள்போல் அதன் கழுத்தில் கைகொடுத்து கொல்வதற்காக த்தனித்தாள்.

மனுஷ்யலோகத்திலும் மனுஷ்யர்களின் கிருகாதிகளிலுமிருந்துவருவது தேவர்களுக்கு விசேஷ வ்யாகத்தை உண்டுபண்ணுது. கங்காதேவியின் சரீரம் மனுஷ்ய சரீரமன்று. சந்தனு சக்ரவர்த்தியின் சரீரம் மனுஷ்யர்களாலுண்டான மனுஷ்யசரீரமாதலால் கங்காதேவி சந்தனுவைவிட்டு வருணலோகத்திற்கு புறப்பட்டுப்போக விரும்பினாள். எட்டாவது குழந்தையையும் கொல்ல எத்தனித்த கங்கையை சந்தனு தடுத்தான். "நீ யார்? ராக்ஷஸியைப்போல் நீ எதற்காக ஏழு குழந்தைகளையும் கொன்றாய்? இந்த பாலஹத்தியால் உனக்கு பாபமோ உண்டாகவில்லை. உன்னுடைய ரூபமோ தேவோத்தம ஸ்திரீகளின் ரூபமாயிருக்கிறது. ஆகையால் நீ குழந்தைகளைக்



கொன்றதற்குப் பிரபலமான காரணந்தானிருக்கவேண்டும், அந்த காரணம் என்காதிற்பட அருகமாயிருந்தால், ஹே மங்களரூபியான என்பத்தினியே! அதை எனக்குச்சொல்'' என்றிவ்வாறு சொல்லப்பட்ட கங்காதேவி சந்தனுராஜனிடம் எல்லா காரணங்களையும் கூறினாள். அக்ஷணமே அவனைவிட்டுப் புறப்பட்டுப் போனாள். தேவர்கள் தன்னுடைய சொரூபம் மனுஷ்யர்களுக்கு தெரிந்தவுடன் மனுஷ்யர்களிடம் அதிககாலம் வாசம்செய்வது தேவர்களின் தர்மமாகாது. பிரபலமானகாரணத்தை முன்னிட்டுதான் தேவர்கள் மனுஷ்யர்களில் வாஸம்செய்கின்றனர். அந்த காரணம் நீங்கியவுடன் அவர்கள் தம்முடைய லோகத்திற்குப் போய்விடுகின்றனர். இவ்வாறு நடைபெறுவது தேவர்களின் தர்மமாகும். மனுஷ்யர்களில் பிறப்பெடுத்த தேவர்களுக்கும்கூட மூலரூபத்துடனிருக்கும் தேவர்கள் கண்ணுக்கு புலப்படுவதில்லை. அவர்களைத்தொடுவதில்லை. அவர்களுடன் வார்த்தையாடுவதில்லை. இது தேவர்களின் இரகசியமான தர்மம். ஆகையால் கங்கை மானிடப்பிறவியில் பிறந்தவரான தன்னுடைய பூர்வபர்த்தாவாயிருப்பினும் வருணனுடைய அவதாரனாயிருப்பினும், சந்தனு சக்ரவர்த்தியை விட்டுவிட்டு, பர்த்தாவான சந்தனுவின் அனுமதியின்பேரில் எட்டாவது குழந்தையைக்கொல்லும் பிரயத்தனத்தினின்றும் விலகி அந்த குழந்தையை கையிலெடுத்துக்கொண்டு வருணலோகத்திற்கு புறப்பட்டுப்போனாள். கங்கை அந்த குழந்தையை பிருஹஸ்பதி ஆசாரியாளின் சுவாதீனத்தில் விட்டாள். தேவவிரதரென்று பெயர்கொண்ட அந்த கங்காபுத்திரர் கங்காதேவியால் தேவகுருவான பிருஹஸ்பதி ஆசாரியாளிடம் வித்யாப்யாஸத்திற்காக விடப்பட்டு குருவின் ஆக்ஞையை அனுசரிக்கும் சித்தமுள்ளவராய் ஐம்பதுவருடம் எல்லாவேதங்களையும் அர்த்தத்துடன் அத்யயனம் செய்தார். பிறகு தாயான கங்காதேவி ஜகத்ஸ்ரேஷ்டராயும் முடிவற்றவராயும் ஸமஸ்தஸத்குணங்களுக்கு கடல்போன்றவராயுமுள்ள பிருகுவம்சஸ்ரேஷ்டரான ஸ்ரீபரசுராமரிடம் இந்ததேவவ்ரதரை வித்யாப்யாஸத்திற்காகவிட்டிருந்தாள். இந்த தேவவ்ரதர் வேதசாஸ்திரத்தை ஐம்பது வருஷம் ஸ்ரீபரசுராமரிடமிருந்து சிரவணம் செய்தார்.

அவர் மீண்டும் 25 வருஷம் ஸ்ரீபரசுராமரிடம் அஸ்திரங்களை அப்யாஸம் செய்தார். பிறகு கங்காதேவி தேவவ்ரதனை அவருடைய தந்தையான சந்தனு சக்ரவர்த்தியிடம் ஒப்பிவிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அவளுடைய கரையில் அவனைக்கொண்டுவந்து உட்கார்த்திவைத்தாள். அந்த தேவவ்ரதர் கங்கைநதியின் ப்ரவாஹத்தை முன்னே பெருக விடாமல் பாணபஞ்ஜரத்தால் கட்டி ஜலக்ரீடைசெய்தசமயம், இவருடைய தந்தையான சந்தனுராஜன் வேட்டையாடிக்கொண்டு வன மிருகங்களை தேடிக்கொண்டு தாகம்மேலிட்டு கங்கைநதிக்கு வந்தான். கங்கையில் ஸ்வல்பஜலமே ஓடிக்கொண்டிருந்ததைப்பார்த்து மகாஆச்சரியமடைந்தான். கங்கையில் ஸ்வல்பஜலமே ஓடுவதற்குக் காரணமென்ன, அதை அறிய வேண்டுமென்று கங்கையின்தீரத்தில் சென்றுபார்த்தான். அப்பொழுது பாணங்களால் அணைக்கட்டி கங்காப்ரவாஹத்தை தடுத்து ஜலக்ரீடை செய்யும் தன்னுடைய மகனான தேவவ்ரதனை சந்தனுகண்டான். அந்த தேவவ்ரதனும் தன்னுடைய தந்தையைக்கண்டான். உத்தரக்ஷணமே தேவவ்ரதன் கங்கையில் குதித்து மறைந்துபோனார். இவ்வாறு பாணங்களால் அணை கட்டி விளையாடிக்கொண்டிருந்தவர் யாராயிருக்ககூடுமென்று யோசித்துக்கொண்டிருந்த தன்னுடையபதியான சந்தனுவிடம் கங்காதேவி மகனான தேவவ்ரதனை அழைத்துக்கொண்டுவந்து இந்த உமது குமாரன் உத்தமமான அஸ்திரங்களை அறிந்திருக்கிறான். வீரியம் பலம் இவைகளுடனிருக்கிறான். இந்த குமாரனை உம்மிடம் ஒப்புவித்திருக்கிறேன்.

(தொடரும்.)



# ஷட்ப்ரச்ன உபநிஷத்.

## ஐந்தாவது பிரச்னம்.

(முன் தொடர்ச்சி.)

பின்னாடிகூறப்பட்ட லக்ஷணமுள்ள பரபிரம்மத்தை எந்த மந்திரத்தால் உபாஸிக்கவேண்டும்? அவ்வாறு உபாஸனை செய்தால் பரபிரம்மம் எந்த பலனைத்தருகிறது? என்பது இந்தப்ரச்னத்தில் சொல்லப்படுகிறது.

(1) கார்க்யர் செய்த பிரச்னங்களுக்கு ஆசாரியாளான பிப்பலாதர் உத்தரம் கொடுத்தபின் சிபிகுமாரரான ஸத்யகாமர் பிரச்னம் செய்தார். பகவன் இந்த மனுஷ்யர்களில் எவன் தன்னுடைய மரணம்வரையில் ஓம்காரத்தால் ப்ரதிபாத்யமான பரமாத்மாவை ஓமென்னும் மந்திரத்தால் எப்போதும் தியானம் செய்வானோ அந்த மனுஷ்யன் அந்த உபாஸனையால் எந்த லோகத்தை அடைகிறான் என்று பிரச்னம் செய்தார். இவ்வாறு பிரச்னம்செய்த ஸத்யகாமருக்கு பதிலளித்தார். ஹே ஸத்யகாமா! ஓம்காரவாச்யனானபொருள் எதோ அது பரபிரம்மமாகும். அபரபிரம்மமாகும். ஓம்காரமாகிய ப்ரணவம் ப்ரதானமாய் பரமாத்மாவைத்தான் அறிவிக்கிறது. அந்த பரமாத்மாவின் ஸ்தானமாக அமுக்யமாய் பிரம்மாதிகளையும் அறிவிக்கிறது. ஆகையால் ப்ரணவத்தால் உபாஸிக்கும் வித்வான் இந்தப்ரணவோபாஸனையாகிய மார்க்கத்தால் பரபிரம்மம் அபரபிரம்மம் இவர்களிலொன்றை அடைகிறான். (2) ஓம்காரத்தில் அகாரம், உகாரம், மகாரமென்று மூன்று மாத்திரைகளிருக்கின்றன. அவைகளில் ஓர்மாத்திரைதானுண்டு என்றெண்ணி ஓம்காரத்தால் பரமாத்மாவை ஒருவன் உபாஸனை செய்வானாகில் அந்த உபாஸகன் அந்த உபாஸனையாலேயே பிரஸன்னனான பகவானாலேயே இங்கு வாவென்று அழைக்கப்பெற்றவனாய் அவன்சரீரம் விட்டபின் சீக்கிரத்திலேயே இந்த கர்ம பூமியில் ஜன்மாவை அடைகிறான். ரிக்வேதத்தின் அபிமானிகளான

தேவர்கள் அவனை உத்தமமான பிராம்மண ஜன்மத்தை அடையும்படி செய்கின்றனர். அவன் அந்த பிராம்மண ஜன்மத்தில் ஏகாதசி விஷ்ணுபஞ்சகாதி உபவாஸங்கள், கிருச்ர சாந்திராயணாதி விரதங்கள் இவைகளால் காயக்லேசம், பிரம்மஞானம், ஆஸ்திகபுத்தி இவைகளை அடைந்து இவைகளின் பலரூபமான மகத்வங்களை அனுபவிக்கிறான். ஓம்காரத்தில் இரண்டுமாத்திரைகள்தானிருப்பதாய் எண்ணி ஓம்காரத்தால் உபாஸனை செய்கிறவன் யஜுர்வேதாபிமானி தேவர்களால் அந்தரிக்ஷலோகத்திலுள்ள சந்திரலோகத்திற்கு மேலே கொண்டுபோகப்படுகிறான். அவன் சந்திரலோகத்தில் சிலகாலமிருந்து ஐசுவரியத்தை அனுபவித்துவிட்டு மீண்டும் பூலோகத்திற்கு வருகிறான். எவன் அகாரம், உகாரம். மகாரமாகிய மூன்றுமாத்திரைகளுள்ள சம்பூர்ணமான ஓங்காரத்தால் இந்த பரமபுருஷனை உபாஸனை செய்து பகவானைக்காண்கிறானோ அவன் தேஜோமயனான சூரியனிடம் சேர்ந்து பாம்பு தன் சட்டையை உரித்து சுத்தமாவதுபோல இவன் ப்ராரப்த பாபத்திலிருந்து விடுபட்டவனாகிறான். ஸாமவேதாபிமானிகளால் சதுர்முகனின் ஸ்தானமான ஸத்யலோகத்திற்கு கொண்டுபோகப்படுகிறான். இவ்வாறு சத்யலோகத்திற்கு கொண்டுபோகப்பட்ட அந்த அதிகாரி ஸத்யலோகாதிபதியாகிய ஸகல ஜீவோத்தமனாகிய பிரம்மாவின் உபதேசத்தினின்றும் உத்தமோத்தமராகியும் ஸகல சரீரங்களிலுமிருப்பவரும் பூர்ணருமான வாஸுதேவமூர்த்தியைக் காண்கிறான். பிறகு அவருடைய தரிசனமானபின் அவனுடைய ஞானம் விருத்தியாகி அவரையே அடைகிறான். (3) இந்த விஷயத்தில் அடியில்கண்ட இரண்டுசுலோகங்கள் பிரமாணங்களாக இருக்கின்றன. அகார, உகார, மகாரமாகிய ஓங்காரத்தின் மூன்று மாத்திரைகள் தனித்தனியே அறியப்படினும் இரண்டுஇரண்டாக சேர்த்து அறியப்படினும் அதாவது சிலது அறியப்பட்டு எல்லாம் பூராவாய் அறியப்படாமலும் உச்சம், நீசம், மத்யமம் இந்தஸ்வரங்களால் உச்சரிக்கப்படினும் இவை ஸ்திரமான பலனைத்தாராமல் புனராவிருத்தியுள்ள பலனைத்தான் தருகின்றன. மூன்று மாத்திரைகளையும்சேர்த்து நன்றாய் அறிந்து உச்சரிக்கப்



படுமேயானால் அந்த ஞானி புனராவிருத்தியுள்ளபலனை அடைவதில்லை. இதையே மற்றொரு சுலோகமும் விவரித்துக்கூறுகிறது. ஒரேமாத்திரையின் ஞானபூர்வகமான உபாஸனையால் ரிக்வேதாபிமானி தேவதைகள் இந்த உபாஸகனை மனுஷ்யலோகத்திற்கு சேர்ப்பிவிக்கின்றனர். இரண்டுமாத்திரைகளை ஞானபூர்வமாய் உபாஸிப்பதால் யஜுர் வேதாபிமானி தேவதைகள் அந்த த்விமாத்ரோபாஸகனை அந்தரிக்ஷலோகத்திலுள்ள சந்திரலோகத்திற்கு சேர்ப்பிக்கின்றனர். அளவற்ற சுகமுள்ளதாயும் ஜராமரணம் முதலான பயமற்றதாயும் ஸர்வோத்தமமானதாயும் எதை ஞானிகள் அறிகின்றனரோ அந்த பரபிரம்மத்தையே மூன்று மாத்திரையோடுகூடிய ஓம்காரமாகிய மார்க்கத்தால் மூன்றுமாத்திரையோடு கூடியதாய் அறிந்து ஸாமவேதாபிமானி தேவர்களால் அந்த பிரம்மத்தையே அடைகிறான்.

ஐந்தாவது பிரச்னம் முடிந்தது.

---

## ஆருவது ப்ரச்னம்.

---

ப்ராணர் முதலான தேவர்களும் இதர ஜீவர்களும் ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி அவஸ்தைகளில் பரமாத்மாவின் அதீனர்களென பின்னடி சொல்லப்பட்டது. அத்துடன் இவர்களெல்லோரும் மோக்ஷத்திலும்கூட பரமாத்மாவின் அதீனர்களென இந்த ப்ரச்னத்தில் சொல்லப்படுகிறது.

(1) பிறகு பாரத்வாஜரின் குமாரரான ஸுகேசரென்பவர் குருவை ப்ரச்னம் செய்தார்! குருஸ்வாமி! கோஸலநாட்டாரான ஹிரண்யநாபரென்ற ஓர் ராஜகுமாரன் என்னிடம் வந்து இந்தகேள்வியைக்கேட்டான். என்னவென்றால் ஹே பாரத்வாஜரே! ஷோடசகலையுள்ள ஓர் புருஷனிருப்பதாய் கூடிய ஸாமானியமாய் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த ஷோ நன்குயுள்ள புருஷனை தாம் விசேஷமாய் அறிந்திருந்தா எனக்கு புருஷன் யார்? அவர் எங்கு இருக்கிறார்? அந்தன தைக்கலைகள் எவை? அந்த பதினாறு கலைகள் அவருக்கு ரக்ஷிப்ப

கூடின? இவை முதலியவைகளை எனக்குச்சொல்லுமென்றார். இவ்வாறு என்னைக்கேட்ட அந்த குமாரனான ஹிரண்யநாபனைப் பார்த்து நான் அந்த ஷோடசகலையுள்ள புருஷனை அறியேன். நான் அவனை அறிந்திருந்தால் உனக்கு நானேன் சொல்லாமலிருப்பேன் என்று நான் பதில் கூறினேன். அவனுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. நான் சபதம் செய்தேன் எவன் தனக்குத்தெரிந்திருந்தும் தெரியாதென்று பொய்சொல்லுகிறானோ அவன் ஸர்வாத்மனா ஸாரமற்றுப்போகிறான். அவன்செய்த புண்ணியமெல்லாம் நசித்துப்போகின்றன. ஆகவே பொய்யைச்சொல்வதாலுண்டாகும் பாபத்தை அறிந்திருக்கும் நான் பொய்யைச் சொல்லத்தகுந்தவனன்றென்று பலவாறு சொல்லி அந்த ராஜபுத்திரனுக்கு நம்பிக்கை உண்டாக்கியதும் அவன் நம்பிக்கைப்பெற்று ரதத்திலேறி வெட்கப்பட்டு மௌனமாய் வந்தவழிப்பார்த்துக் கொண்டு புறப்பட்டுப்போனான். ஆகவே அதுமுதற்கொண்டு அந்தவிஷயத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்று நான் எண்ணியிருப்பதை உங்களைக்கேட்கிறேன். அந்த பதினாறுகலையுள்ள புருஷன் எங்குயிருக்கிறான். அந்த கலைகள் எவை? அவன் எப்படி ஷோடசகலையுள்ளவனான்? என்று (2) இவ்வாறு ப்ரச்னம் செய்த பாரத்வாஜரைப்பார்த்து பிப்பலாதர் சொல்கிறார். ஹே ஸோமபானத்திற்கு அருகனான பாரத்வாஜனே! ஜீவனுடன் சேர்ந்த 16 கலைகள் சிருஷ்டிகாலத்தில் எந்த புருஷனிடமிருந்து சிருஷ்டியடைந்தனவோ ஸம்ஹாரகாலத்தில் அதாவது முக்தியடை [illegible] ாரை ஆசிரயிக்கின்றனவோ அந்த ஷோடசகலையுள்ள [illegible]ருஷன் இந்த ப்ராணிகளின் சரீரத்தின் உள்ளேயே இருக்கிறான். இந்தப் புருஷனைக்காண வெகுதூரம் போகவேண்டியதில்லை. அவர் கல்பத்தின் துவக்கத்தில் சிருஷ்டி டாக [illegible]த்தில் கலைகளை சிருஷ்டிப்பதாய் யோசித்தார்.

எல்லாம்

இந்தஸ்வா

பலனைத்தா

மூன்று மாத்

(தொடரும்.)

---



# த்வாதச ஸ்தோத்திரம்.

(ஸ்ரீ ஆனந்ததீர்த்த பகவத்பாதாள் செய்தது)

ஒன்பதாவது அத்யாயம்.

(முன் தொடர்ச்சி.)

(1) அத்யந்தம் பூஜிக்கப்பட்டவரே! அக்ஞானாந்தகாரமாகிய மலைத்தொடர்களை தகர்த்துத்தள்ளுபவரே! பிதாமஹரான சதுர்முகனுக்கும் ஐசுவரியத்தை அளித்தவரே! குணசமூகங்களுக்கு ஆசிரயமாயிருப்பவரே! மிகவும் மங்களமான சாஸ்திராதிகளால் சொல்லப்படுகிறவரே! உத்தமர்களான பிரம்மாதிகளில் எப்போதும் பிரகாசிப்பவரே! ஜகத்தின் முக்ய காரணரே! ஹேராமா! ஹேலக்ஷ்மீபதியே! (2) சதுர்முகன் பரமசிவன் முதலான தேவர்களால் எப்போதும் வணங்கப்படுகிறவரே! ஹே லக்ஷ்மீதேவியின் மனதுக்கு ப்ரியமானவரே! எனக்கு சரணமாக இருப்பீர். (3) கணக்கற்ற குணங்களையே சரீரமாகக்கொண்டவரே! தோஷமற்றவரே! நீர் எனக்கு சரணமாக இருப்பீர். (4) அனந்தமான ஆனந்தத்திற்கு கடல்போன்ற தோஷரகிதமான அப்ராகிருத சரீரமுள்ளவரே! துக்கமற்றவரே! எனக்கு சரணமாக இருப்பீர். (5) கொந்தளித்துக்கொண்டிருந்த பிரளய ஜலத்தில் விளையாடுகிறவரே! ஒரேவகையாயுள்ளவரே! ஆனந்தமயமான மத்ஸ்யரூபமுள்ளவரே! எனக்கு சரணமாக இருப்பீர். (6) ஸுராஸுரர்கள் பலமாய்க்கடைந்த மந்தரபர்வதத்தை தரித்தவரே! விலக்ஷணமான கூர்மாவதாரமுள்ளவரே! எனக்கு சரணமாக இருப்பீர். (7) அந்த மேலான மலையுடனுள்ள பூமியை தரித்தவரே! அப்ராகிருத வராஹரூபங்கொண்டவரே! உத்தமமான ஞானஸ்வரூபியே! எனக்கு சரணமாக இருப்பீர். (8) அதிசயமான பலத்துடன் கூடிய ஹிரண்யகசிபுவென்னும் அஸுரனின் வக்ஷஸ்தலத்தை நன்கு பிளந்தவரே! ஹே நரஸிம்ஹா! விளங்குவீராக! எனக்கு சரணமாக இருப்பீர். (9) பலிச்சக்ரவர்த்தி முதலான தைத்யர்களின் சிற[illegible]ப நாசம் செய்கிறவரே! ஜகத்தை ரக்ஷிப்ப

வரே! பராஜயமில்லாதவரே! எனக்கு சரணமாக இருப்பீர் (10) ஒருவராலும் ஜயிக்கப்படாதவரே! துஷ்ட ராஜக்கூட்டங்களை அழித்துப் போட்டவரே! ஹே லக்ஷ்மீபதியே! வீரர்களை ரக்ஷிப்பவரே! எனக்கு சரணமாக இருப்பீர். (11) மிகவும் க்ரூரர்களான ராக்ஷஸர்களை கொளுத்திப்போட்டவரே! ஹே பரமனே நாசமற்றவரே! ஹே ரகுநாயகா! ஹனுமார் முதலியவர்களுக்கு ஞானத்தை அளித்தவரே! எனக்கு சரணமாக இருப்பீர். (12) அதிஸுந்தரமான திவ்யசரீரம் படைத்தவரே! குசேலாதிகளுக்கு வரத்தை அளித்தவரே! மகா பலமுள்ளவரே! யதுவம்சத்தாரில் சிரேஷ்டரே! பார்த்தனுக்கு ஸாரதியாயிருந்து ரக்ஷித்தவரே எனக்கு சரணமாயிருப்பீர். (13) அஸுரர்களை மோகிப்பவரே! நிர்மல ஞானமுள்ளவரே உத்தம குணங்கொண்டவரே! ஹே புத்தாவதாரம்செய்த ப்ரபோ! எனக்கு சரணமாக இருப்பீர். (14) கலியின் தோஷத்திற்கு அக்னி போன்றவரே! நற்பாக்யமுள்ளவர்களுக்கு திருவிழாவாயிருப்பவரே! சரணத்தைத்தரும் கல்கி அவதாரம் செய்த ஈசனே! எனக்கு சரணமாக இருப்பீர். (15) ஜகத்திற்கு ஸ்ருஷ்டி சம்ஹாராதிகளுக்கு காரணமாயிருப்பவரே! மோக்ஷாநந்தத்தைத்தருபவரே! லோகவிலக்ஷணரே! புருஷோத்தமனே! எனக்கு சரணமாக இருப்பீர். (16) இவ்வாறு ஹே பகவான்! தங்களுடைய மேலான ஸ்தோத்திரத்தில் எப்போதும் ஈடுபட்டிருக்கும் உத்தமரான ஆனந்ததீர்த்த முனிவருக்கு சரணமாயிருப்பீர்.

---

## பத்தாவது அத்யாயம்.

---

(1) ஹே ரக்ஷகா! தாம் லக்ஷ்மீபதி தமக்கு இணையே இல்லை. ஹே உத்தமனே! பிரம்மருத்திராதிகளுக்குக் காரணனே! கருணாபூர்ணனே! அபீஷ்டத்தை அளிப்பவனே! உம்முடைய ப்ரபாவத்தை எனக்கு ஞாபகப்படுத்துவீர். (2) ருத்திராதி தேவர்களால் வணங்கப்படும் சதுர்முகனுக்கு ஸ்வாமியே! ஸாதுக்களுக்கு வரத்தை அளிப்பவரே! பரிபூர்ணமான ஸம்பூர்ண குணங்களைக்கொண்டவரே! கருணாபூர்ணனே! அபீஷ்



டத்தை அளிப்பவனே! உம்முடைய ப்ரபாவத்தை எனக்கு ஞாபகப்படுத்துவீர். (3) எல்லா ஸாதுக்களின் அக்ஞானந்தகாரத்தை நாசம் செய்கிறவரே! மோக்ஷாநந்தமாகிய அமிர்தத்தை ஊட்டுகிறவரே! (4) ஸம்ஸார ஸமுத்திரத்தைக்கடக்க இம்மூவருக்கும் படகுபோன்றவரே! ஸாதுக்களால் நன்கு பூஜிக்கப்பெறும் சரணமுள்ளவரே! இந்திராதி திக்பாலர்களுக்கு ஆதாரனே! (5) ஸத்வரஜஸ்தமோ குணங்களைக் கடந்தவரே! விசேஷமாய் ஸர்வத்தையும் தரிப்பவரே! ஸர்வகாலத்திலும் ஸரியான பக்தியைத்தாரும். (6) ஜகத்துக்கு காரணங்களான ப்ரகிருத்யாதிகளை சேர்ப்பிக்கிறவரே! என் தந்தையே! விசேஷமாய் எனக்கு சரணமாக இருப்பீர். (7) மரணம் ஜீவனம் இவைகளைத்தருபவரே! ஜகத்ரக்ஷகரே! ஜகத்ஸ்வாமியே! பக்திகுறையாமலிருக்க ரக்ஷிப்பாய்! (8) பாலஸூரியனைப்போல் வர்ணமுள்ள பாதாரவிந்தமுள்ளவரே! நிர்மலமான காந்தியுள்ளவரே! (9) கமலம்போன்ற வர்ணமுள்ள பத்மராகமணியின் வர்ணத்தால் சிலாக்யமாய் விளங்கும் நகமுள்ளவரே! ஆதிகாரணரே! (10) தாமரைகளின் பைபோலுள்ள பாவனமான சிலாக்ய கணைக்காலுள்ளவரே! அமிதமான சக்தி படைத்தவரே! (11) யானையின் துதிக்கைபோல் சோபிக்கும் உத்தமமான தொடையின்மீது லக்ஷ்மியை வகித்திருக்கும் லக்ஷ்மீஸகாயனே! (12) மலர்ந்த சரக்கொன்னை புஷ்பம்போல் மஞ்சள்வர்ணமுள்ள போர்வையுள்ளவரே! (13) சதானந்தரான சதுர்முகன் பிறந்த அதிஸுந்தரமான கமலமுண்டான நாபியுள்ளவரே! (14) ஜகதம்பையான மகாலட்சுமியின் நிர்மலமானதும் ஸுந்தரமானதுமான இருப்பிடமாகிய வக்ஷஸ்தலமுள்ளவரே! மேலான யோகமுள்ளவரே! (15) ஜகத்தையே நன்கு மறைத்துவைக்கக்கூடியதான தளிர்போன்ற வயிறு உள்ளவரே! (16) தைத்யர்களுக்கு நாசத்தைத்தரும் சக்ரம் சங்கம் கதை இவைகளைக்கொண்ட மேலான புஜங்களுள்ளவரே! (17) பூர்ணமான ஞானத்திற்கு மேலான ஆதாரமாயுள்ள முககாந்தியால் சந்திரனைப்போல் விளங்குபவரே! (18) ஸமஸ்த பாபங்களாகிய ஸமூகங்களை நாசம் செய்வதும் உத்தமமான

மோக்ஷானந்தத்தைத்தருவதுமான பார்வையுள்ளவரே! (19) நாசமற்றதான பரிபூர்ண ஆனந்தரான ஸ்ரீஹரியின் பதமாகிய மோக்ஷத்தில் விருப்பமுள்ள ஆனந்ததீர்த்த முனிவர் ஸ்ரீஹரியின் சம்மந்தமான இந்த பாடக்கூடிய ஸ்தோத்திரத்தை இயற்றினார்.

---

## பதினொன்றாவது அத்யாயம்.

(1) பெரியதாயும் நாசமற்றதாயும் அப்ராக்ருதமாயும் அமிர்தத்தை பெருகவிடுவதாயும் ப்ரம்மருத்திர இந்திராதிகளால் வணங்கப்படுவதாயுமுள்ள சர்வேசுவரனான ஆனந்தரூபி பகவான் ஸ்ரீஹரியின் சரணத்தை வணங்குகிறேன். (2) எல்லா வேதமொழிகளாலும் உத்தமமாய் சொல்லப்படுவதும் மகாலட்சுமிக்கு ஆவாஸஸ்தானமாயும் உத்தமமாயுமுள்ள சர்வேசுவரனான ஆனந்தரூபிபகவான் ஸ்ரீஹரியின் சரணத்தை வணங்குகிறேன். (3) அந்த சரணம் ஸர்வதேவர்களின் காரணபூதமான பகவானுடையது. பெரிய அஞ்ஞான ரூபமாகிய அந்தகாரம் அதனால் நிவிர்த்திசெய்யப்படுகிறது. (4) லோகசுந்தரரான ஸ்ரீநாராயணரின் உத்கிருஷ்டமானதாயும் நிந்திக்கதகாததாயுமுள்ள சரணத்தை நிதம் பக்தியுடன் வணங்குகிறேன். (5) நீலோத்பலபுஷ்பத்தின் மத்யத்தின் வர்ணமுடையதும் நற்குணம்பொருந்தியதும் துர்வாதிகளுக்கு அஞ்ஞானத்தைத் தருவதுமான ஸ்ரீஹரியின் சரணத்தை வணங்குகிறேன். (6) எல்லாதேவர்களுக்கும் ஐசுவரியம் விருத்தி முதலியவைகளைத்தருவதாயும் உத்தமமாயுமுள்ள ஸ்ரீஹரியின் சரணத்தை வணங்குகிறேன். (7) எது அபக்தர்களுக்கு தூரத்திலும் வெகுதூரத்திலிருக்கிறதோ பக்தர்களுக்கு சமீபத்திலும் வெகுசமீபத்திலிருக்கிறதோ அந்த ஸ்ரீஹரியின் சரணத்தை நான் வணங்குகிறேன். (8) சம்பூர்ணமான எல்லாகுணங்களுக்கு முக்ய ஆசிரயமாயும் ஆதியந்தமில்லாததாயுமுள்ள தேவோத்தமரான அந்த ஸ்ரீஹரியின் சரணத்தை நான் வணங்குகிறேன். (9) ஆனந்தரூபியான ஸ்ரீஹரியின் இந்த ஸ்தோத்திரம் ஆனந்த தீர்த்தமுனிவரால் செய்யப்பட்டது. மகாபுண்யகரமானது. இதைப்படனம் செய்கிறவர் மோக்ஷானந்தத்தை அடைவார். (தொடரும்.)



# புருஷஸூக்தம்.

---

## 3-வது வர்க்கத்தின் தாத்பரியம்.

---

தேவர்கள்செய்த மானஸியக்ஞத்தால் ஆராதிக்கப்பட்ட புருஷநாமக பகவானிடமிருந்து முதலில் யக்ஞத்தின் பாஹ்ய ஸாதனங்கள் உண்டானதை ஸாமான்யமாய்ச்சொல்லி இப்போது அவருடைய அங்கத்தினின்றும் சிருஷ்டியடைந்தவைகளைச்சொல்வதற்காக முதலில் பிரச்னம் செய்யப்படுகிறது. (1) 'தேவா: யக்ஞம் அதன்வத' என்று தேவர்கள் செய்ததாய் சொல்லப்பட்ட மானஸ யக்ஞத்தில் தேவர்கள் அந்த யக்ஞத்திற்கு உத்தேச்ய வஸ்துயாரென்று விசேஷமாய் மனதால் எண்ணினார்கள். மேலும் அந்த பரம்பொருளை எந்தெந்தவிதமாக மனதால் கல்பித்துக்கொண்டார்கள். அதாவது எந்தெந்த வஸ்துக்களை சிருஷ்டித்த எந்தெந்த அங்கமுடைய மகாப்ரபு அவரென அவர்கள் தியானித்தனர். அவருடைய முகம் யாரை சிருஷ்டித்ததென சொல்லப்படுகிறது. அவருடைய பாஹுக்கள் யாரை சிருஷ்டித்தவைகளென சொல்லப்படுகிறது. அவருடைய தொடைகள் யாரை சிருஷ்டித்தவைகளென சொல்லப்படுகிறது. கால்கள் யாரை சிருஷ்டித்தவைகளென சொல்லப்படுகிறது. (12) என்றிவ்வாறு வேதபுருஷர் ப்ரச்னம் செய்துகொண்டு பதில் சொல்லப்படுகிறது. அந்த மகா புருஷரின் முகத்தினின்றும் பிராம்மணஜாதி பிறந்தது. "பிராம்மணோ முகமித்யேவ முகாஜ்ஜாதத்வஹேதுத: / யதாவதத் சுருதௌதத்வத் ஜீவோ பிரம்மேதிவாக்பவேத் ||" என்று சொல்லப்பட்டபடி புருஷரூபி பரமாத்மாவின் முகத்தினின்றும் பிராம்மணன் பிறந்தபடியால் இந்த புருஷ ஸூக்த வேதத்தில் பிராம்மணன் இந்த பகவானின் முகமென்றே சொல்லப்பட்டது. பிராம்மண ஜாதிக்கு அபிமானி சதுர்முக பிரம்மாதான். பகவானுடைய முகம் சதுர்முக சப்தவாச்யமாயிற்றெனலாம். க்ஷத்திரிய ஜாதிக்கு அபிமானி வாயுவும் வைச்ய ஜாதிக்கு அபிமானி நாஸிக்யவாயுவும், சூத்ர

ஜாதிக்கு அபிமானி நிருதிவாயுவுமாவார்கள். பாஹுக்களிலிருந்து க்ஷத்திரியஜாதியும் துடையிலிருந்து வைசிய ஜாதியும் கால்களிலிருந்து சூத்ரஜாதியும் உண்டாயிற்று. எந்தெந்த அவயவத்தினின்றும் எந்தெந்த ஜாதி பிறந்ததோ வேதத்தில் அந்தந்த ஜாதியின் பெயரையே அந்தந்த அங்கத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது. எல்லா வர்ணங்களிலும் பெரியயார்களானபடியால் பிராம்மணர்களென அழைக்கப்பெற்றார்கள். சண்டையிலிருந்து ரக்ஷிக்கிறபடியால் க்ஷத்திரியர்களென்றும் த்விஜர்களெனப்படும் மூன்று வர்ணத்தார்களில் கடைசி வர்ணத்தாராய் ஊனமாய் இருக்கிறபடியால் வைசியர்களென்றும் மூன்று வர்ணத்தார்களுடனும் சேர்ந்து நற்காரியங்களில் ஈடுபட்டு பிராம்மணனிடத்தில் அபிமானங்கொண்டிருப்பதால் சூத்ரனென்றும் அழைக்கப்படுகிறார்கள். அழகிய நான்கு முகங்கொண்ட பிரம்மா பிரம்மாக்னியுடனும் தேவர்களுடனும் மனுஷ்யர்களில் பிராம்மணர்களுடனுமிருந்துவருகிறாரென்றும் பிரம்மா பிராம்மணஜாதி அபிமானி என்றும் க்ஷத்திரியஜாதி அபிமானி வாயுபகவான் கருட, சேஷ, ருத்திராதி தேவராஜர்களுடனும் மனுஷ்யர்களில் க்ஷத்திரியர்களுடனும், வைசியஜாதி அபிமானியான நாஸிக்ய வாயு தேவர்களில் வஸு முதலியவர்களுடனும் மனுஷ்யர்களில் வைசியர்களுடனும், சூத்திரஜாதிக்கு அபிமானியான அக்னி என்றும் தேவர்களில் நிர்ருதி என்னும் பிரஹத்பாஷ்யம் அறிவிக்கிறது. ஸ்ரீமத்பாகவதத்தில் "புருஷஸ்யமுகம் பிரம்மா க்ஷத்ரமேதஸ்ய பாஹவ:/ ஊர்வெள வைச்யோ பகவத: பத்ப்யாம் சூத்ரோ வ்யஜாயத || விப்ர க்ஷத்திரிய விட்சூத்ரா: முகபாஹூருபாதஜா:/ வைராஜாத் புருஷாஜ்ஜாதா: யஆத்மா சாரலக்ஷணா: ||" என்று ஸ்ரீமத் பாகவதத்தில் இந்த வேதார்த்தமே கூறப்பட்டிருக்கிறது. (13) இவ்வாறு ஜாதி சிருஷ்டியை சொல்லிவிட்டு தேவசிருஷ்டியை வேதபுருஷர் அறிவிக்கிறார். இந்த ஸ்ரீஹரியின் மனதினின்றும் சந்திரனும், கண்களினின்றும் சூரியனும், முகத்தினின்றும் இந்திராக்னிகளும் ப்ராணத்தினின்றும் முக்யவாயுவும் அல்லது ப்ரவஹவாயுவும் பிறந்தனர்.

(தொடரும்)



## ஸ்ரீ சந்திரிகாசாரியாளென்னும் ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

பல்லண்ண சுமதியின் பாரியாளான அந்த பதிவ்ரதாசிகாமணி இவ்வாறு தத்தளித்து வருந்துவதை சகியாது கருணைகூர்ந்து ஸர்வாந்தரியமாயியாய் ஸர்வ ஸாக்ஷியாய் ஸகல ஹிருதய நிவாஸியாயிருந்து வரும் ஸ்ரீஹரி அந்த அம்மாளின் சொப்பனத்தில்தோன்றி சீக்கிரமே அவளுடைய மனோபீஷ்டம் பூர்த்தியாகுமென்பதை அறிவித்தார். உடனே அந்த அம்மாள் ஆச்சரியப்பட்டு தடபுடலாய் எழுந்து அந்த சொப்பனத்தை எண்ணி எண்ணி ஆனந்தபரவசையானாள். மங்கள தேவதையான மகாலட்சுமியையும் மங்கள ரூபியான ஸ்ரீஹரியையும் வணங்கித்துதித்தாள். ஸ்ரீஹரியே தமக்கு கதி என்றெண்ணி அவரிடம் சரண்புகுந்து பிராக்ஞ நாமகரால் தழுவப்பட்டு படுத்துக்கிடக்கும் தன் கணவரிடம் தான்கண்ட சொப்பனத்தை அறிவிக்க எண்ணங்கொண்டு அவருடைய இருசரணங்களையும் மெதுவாய் தனது கோமலமான கரங்களால் தொட்டுக்கண்களில் ஒத்திக்கொண்டாள். உடனே பல்லண்ண ஸுமதி விழித்துக்கொண்டு ஹே முகுந்தா! மாதவா! ஸ்ரீஹரே! முராரே! சரணம் சரணம் என்று சொல்லிக்கொண்டெழுந்தார். அந்த அம்மாள் உடனே வலம்வந்து நமஸ்கரித்து சமீபத்தில் நின்று "ஆர்யபுத்ரா! இன்றுதான் ஸுதினம். இந்த பொழுதுதான் நல்லபொழுது. இனி எமக்கு கவலையில்லை. துக்கமும் அணுகாது. அற்புதமான ஓர் ஸ்வப்னத்தைக்கண்டேன். கல்யாண குணநிதியான கருணாஸமுத்ரர் ஸ்ரீவியாஸபகவான் ஸ்வப்னத்தில் என்னெதிரிற்தோன்றினார். அபயப்ரதானம் செய்தார். பரமானுக்ரஹம் காட்டினார். அமுதமொழிகளை ஆடினார். 'பெண்ணே! நீயும் உனது கணவனும் செய்துவரும் தவத்தால் நாம் மகிழ்ந்தேன். உங்களிச்சை பூர்த்தியாகும்காலம் நெருங்கிவிட்டது. உனக்கு இந்த ஸுவர்ணத்தட்டைத் தருகிறேன் எடுத்துக்கொள்" என்று வெகு சொகுசான வேலைப்பாடுள்ளதாய் கண்ணைப்பறிக்கும் காந்தியுள்ள ஓர் ஸுவர்ண தாம்பாளத்தைத்தந்தார். அதை நான் பெற்று ஆனந்தப்பட்டுக்கொண்டிருக்கையில் "பிரம்மண்யதீர்த்தரென்னும் ஓர் யோகீசுவரர் சீக்கிரமே வருவார். அவர் சொல்லுகிறபடி செய்யுங்கள், உங்களுக்கு ஸர்வமங்களமுண்டா

குமென்று சொல்லி மறைந்தார். என்கையிலே அந்த தட்டு இருந்தது. அதற்குள்ளாக நான் விழித்துக்கொண்டுவிட்டேன். அவ்வாறு உண்மையில் நடந்ததாக இன்னமும் தோன்றுகிறதேயொழிய சொப்பனமாகவே நான் எண்ணவில்லை. நாதா! எல்லாம் ஈசனருள், இனி எனக்கு புத்ரஸுகமுண்டாவது நிச்சயம். என் தீவினை தொலைந்து நற்காலம் பிறந்துவிட்டதென்றே எண்ணுகிறேன். ஈசனருளாலுண்டான அந்த புத்திரன் ஜனித்தபிறகு எனக்கிணையாருண்டு. அக்குழந்தைக்கு விலையில்லா ஆபரணங்களைப்பூட்டி கண்ணுக்கு மைதீட்டி பட்டு பீதாம்பரங்களைக்கட்டி என் கண்மணி வாடா! குலமணி வாடா! நவமணி வாடா! என்று அன்பாக அழைத்து மார்புடன் அணைத்து சீராட்டி பாராட்டுவேன்." என்று பலவாறு சொல்லி ஆனந்தப்பட்டு ஆனந்தக்கண்ணீர் வடியவிட்டாள். இதைக்கேட்ட பல்லண்ணஸுமதி ஆனந்தஸாகரத்தில்மூழ்கி "காந்தே! இதில் ஸந்தேகமே இல்லை. புத்ரனுண்டாவது நிச்சயம்தான். பெரியோர்கள் கூறிய வார்த்தை எப்போதும் வீணாகாது. கிழக்கே உதிக்கும் சூரியன் திக்குமாறி மேற்கே உதித்தாலும் சரியே! மேருபர்வதம் சலித்தாலும் சரியே! அக்னி குளிர்ந்தாலும் சரியே, கற்றரையின்மீது தாமரை உற்பவித்தாலும் சரியே, பெரியோர்களின் வார்த்தை பொய்க்காதுதான். தவிரவும் விடியற்காலையிற் தோன்றிய ஸ்வப்னம் அக்ஷணமே பலத்தைத் தருமென்று கூறுகிறது ஜோதிஸ்சாஸ்திரம். ஆகவே இத்தகைய பரமமங்கள விருத்தாந்தத்தை அறிவித்த அந்த ஸ்ரீஹரிநாராயணனுக்கு இன்று நாம் எமது நன்றியைக்காட்டவேண்டும். அந்த ஜகதீசுவரன் மகிழ்ந்தானென்றால் எதுதான் துர்லபம். ஆகவேஇன்று கோயிலுக்குப் போய் ஸ்ரீராமபிரானுக்கு விசேஷமான அபிஷேக அர்ச்சனாதிகளைச் செய்யவேண்டும். அதற்குவேண்டிய ஏற்பாடு செய்கிறேன். நீயும் இதற்கு சித்தமாயிரு என்று சொல்லி எழுந்து வெளிவந்து அவ்வூரிலுள்ள ஸ்ரீராமர் கோயிலதிகாரிகளுக்குச் சொல்லியனுப்பி அன்று ஸ்ரீராமருக்கு விசேஷமான அபிஷேகம் அலங்காரம் அர்ச்சனாதிகளைச்செய்ய ஏற்பாடுகளைச்செய்தார். சீக்கிரத்திலேயே ஸ்நானான்ஹிகங்களை முடித்துக் கொண்டார். வழக்கப்படி அக்னி ஹோத்ராதிகளைச்செய்தார். அவ்வூர் அக்ரஹாரத்திலுள்ள எல்லா பிராம்மண ஸுவாஸினி ஸ்திரீகளை கோயிலுக்குவந்து ஸ்ரீராகவனைத் தரிசித்து மகாப்ரஸாதங்களைப்பெற்றுச் செல்ல செய்திசொல்லி அனுப்பினார். எல்லா பிராம்மணர்களும் அவரவர்களின் ஆன்ஹிகங்களைமுடித்துத் தயாரானவுடன் அவர்களை அழைத்துக்கொண்டு பல்லண்ணசுமதி தனது பத்னிமார்களுடன் பல



வகை பூஜா திரவியங்களை எடுத்துக்கொண்டு ஸ்ரீராமர்கோயிலுக்குச்சென்றார். பிராம்மணர்கள் உரக்க ஏகோபித்து வேதமந்திரங்களை உச்சரிக்க ஸ்ரீராகவனுக்கு மகா அபிஷேகம் நடந்தது. விசேஷமான அலங்காரம் செய்யப்பட்டது. யதேச்சமாய் உணவுகள் தயாரிக்கப்பட்டு நைவேத்யமாகி மகாஜனங்களுக்குப் விநியோகம் செய்யப்பட்டன. ஜனங்கள் ஏராளமாய்க் கூடியிருந்தனர். பல்லண்ணஸுமதி எல்லோருக்கும் விசேஷமான தக்ஷிணைகளைத்தந்தார். பிறகு தனது பத்னியுடன் அந்த அந்தணர் கோஷ்டிகளை நமஸ்கரிக்க அவர்கள் வேதமந்திரமோதி அந்த தம்பதிகளுக்கு மந்திராக்ஷதைகளைத்தந்து "சீக்கிரமேவஸத்புத்ராவாப்திரஸ்து" என்று அந்தரங்கபூர்வமாய் ஆசீர்வாதம் செய்தனர். பிராம்மணா: மமதேவதா என்று ஸ்ரீகிருஷ்ணராலேயே கொண்டாடப்படும் பிராம்மணர்களின் அமோகமான ஆசீர்வாதத்தைப்பெற்று அகமகிழ்ந்த பல்லண்ணசுமதி ஸ்ரீராமச்சந்திரனை ப்ரதக்ஷிணம்வந்து நமஸ்காரம்செய்து பெருங்கூட்டமாயிருந்த அந்த பிராம்மண கோஷ்டியுடன் கோயிலிலிருந்து வெளிவந்து புறப்பட்டார். அவர்கள் வெளியே புறப்படவும் எதிரில் ஓர் பிராம்மணக்கூட்டம் வருவதைக்கண்டனர். காவேரியில் ஸ்நானம்செய்து த்வாதச புண்ட்ரங்களையும் பஞ்சமுத்திரைகளையும் தரித்து ஸ்வாமி பெட்டிகளைத்தரித்திருந்தனர். சிலர் புஸ்தக மூட்டைகளை சிரஸ்ஸின்மீது தரித்திருந்தனர். சிலர் மூல க்ரந்தங்களையும் சிலர் ஸ்தோத்திர பாடங்களையும் உச்சரித்துக்கொண்டுவந்தனர். பிரம்மதேஜஸ்ஸு அவர்களின் முகத்தில் ஜொலித்திருந்தது. இந்த மகாபுருஷர்கள் யாராயிருக்கக்கூடுமென்று எல்லோரும் பிரமித்தனர். பல்லண்ணஸுமதி ஸ்ரீராமபிரானுக்குத் தான்செய்த அர்ச்சனாதிகள் உடனே பலித்துவிட்டதோவென்றெண்ணினார். பல்லண்ணஸுமதியாரின் ஸம்ஸாரம் தான்கண்ட சொப்பனத்திலறிவித்த மகாயோகீசுவரர் இக்கூட்டத்தில் வந்திருப்பாரோவென சங்கித்து உடனே பர்த்தாவிடம்வந்து அறிவித்தாள். பல்லண்ணஸுமதியும் அவ்வாறே எண்ணி கூட்டத்தை கவனத்துடன் பார்க்கலுற்றார். நடுவில் ஓர் யதீசுவரர் இடையில் சிவந்த காஷாயத்துடனும், கழுத்தில் கமலாக்ஷமாலைகளுடனும், தேகத்தில் த்வாதச புண்ட்ரங்களுடனும், கையில் தாம்பிர கமண்டலுடனும், காதில் துலங்கும் துளசியுடனும், காலில் சப்திக்கும் பாதக்குறடுடனும், ஸ்ரீமத்வஸித்தாந்தமே இவ்வாறு உருவெடுத்து வந்திருக்கிறதோ, அல்லது அஷ்டாக்ஷரி த்வாதசாக்ஷரி முதலான மகாமந்திரங்களின் கோசந்தானிவரோ, அல்லது இவர் தத்வஞானத்தின் பெருந்தீபமோவென்று சொல்லக்கூடியதான ஜொலிக்கும் திவ்ய

தேஜஸ்ஸுள்ளவராய் புன்சிரிப்புமிருந்த வதனமுள்ளவராய் வருவதைக் கண்டார். அவர்தான் ஸொப்னத்தில் ஸ்ரீவியாஸபகவான் அறிவித்திருந்த ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தஸ்வாமிகளாய் இருக்கலாமென நிச்சயித்தார். உடனே பல்லண்ணஸுமதி தனது பாரியாளுடன் வேகமாய் எதிர்கொண்டுபோய் சாஷ்டாங்கம் நமஸ்கரித்தார். அவருடனிருந்த அவ்வூர் பிராம்மணர்களனைவரும் நமஸ்கரித்தனர். பல்லண்ணஸுமதி பரமானந்தமடைந்து ஸ்ரீஸ்வாமிகளுக்கு நல்வரவுகூறி தம்முடைய கிருஹத்திற்கு விஜயம்செய்து அதை பாவனமாக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். ஸ்ரீஸ்வாமிகள் அப்படியே ஆகட்டுமென்று சொல்ல பல்லண்ணஸுமதி எல்லா பிராம்மணர்களுடன் ஸ்ரீஸ்வாமிகளை தம்முடைய கிருஹத்திற்கு வெகுஉற்சாகமாய் அழைத்துவந்து உத்தமமான ஆஸனத்தைத்தந்தார். அர்க்யபாத்யாதி பூஜைகளைச் செய்து அன்று தம்முடைய கிருஹத்திலேயே பிக்ஷையைப்பெற்று தம்மை கிருதார்த்தமாய் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார். ஸ்ரீஸ்வாமிகளும் அதை ஏற்றுக்கொள்ள நூற்றுக்கணக்கான ஜனங்களுக்கு மிருஷ்டான்னம் சீக்கிரத்திலேயே தயாரிக்கப்பட்டது. ஸ்ரீஸ்வாமிகளும் மாத்யான்ஹிக ஸ்நானாதிகளைச்செய்து பகவத்பூஜைகளை முடித்து தீர்த்த பிரஸாதங்களை யல்லோருக்குமருளி பிராம்மண கோஷ்டியுடன் ஆனந்தமாய் பிக்ஷையைப்பெற்றார். ஸ்ரீஸ்வாமிகள் ஏகாந்தமாய் வீற்றிருக்கையில் தனது பத்னியுடன் பல்லண்ணஸுமதி ஸ்ரீஸ்வாமிகளை சாஷ்டாங்கம் பணிந்து தம்முடைய பிரார்த்தனையைக்கேட்டு அனுக்ரஹிக்க வேண்டினார். ஸ்ரீஸ்வாமிகள் என்னவென்றுகேட்க மகாஸ்வாமி நான் கசியபகோத்திரத்திலுதித்தவன், என்னுடைய தந்தை ஸ்ரீராமதேவருக்கு வெகுநாளாய் மகப்பேறு இல்லாமலிருந்து தங்களைப்போன்ற மகாயதீசுவரரின் அருளால் ஆறுமக்கள் பிறந்தனர். நான்தான் எல்லோருக்கும் கனிஷ்டன், எனக்கும் வெகுநாளாய் சந்ததியில்லை, சந்தானத்திற்காகவென இரண்டு பாரியாளையும் விவாஹம் செய்துகொண்டேன். இவள் என் இளைய சம்ஸாரமாவாள். நாமிருவரும் எத்தனையோ விரதாதிகளை அனுஷ்டித்தோம். ஸத்கர்மாக்களைச்செய்து முடித்தோம். அதன் பலனாக தேவரீர் இங்கு விஜயம் செய்திருக்கிறீர்கள். ஸந்ததி இல்லை என்ற பெருந்துக்கம் நம்மை மிகவும் வருத்துகிறது. எங்களிடம் கருணைக்காட்டி பரமானுக்ரஹம் செய்யவேண்டும்.

(தொடரும்.)



## ஸ்ரீகோபாலதாஸர் சரிதை.

(முன் தொடர்ச்சி.)

ஸ்ரீபாகண்ணதாஸர் யாத்திரையை முடித்து ஊர் வந்து சேர்ந்தார். ஒரு ஸமயம் துங்கபத்திரையில் அவர் ஸ்நானம் செய்து அதன் மணலில் ஆன்ஹிகங்களை செய்துகொண்டிருக்க ஒரு பெண்மணி வேணுகோபாலரின் அபிஷேகத்திற்காக வென்று ஓர் பாத்திரத்தில் சுத்தமான பசும்பாலை கொண்டுவந்து கொடுத்தாள். ஸ்ரீபாகண்ணதாஸர் உடனே அந்தபாலை மணலில் கொட்டிவிட்டு பாத்திரத்தைத்திருப்பி தந்து விட்டார். அந்த அம்மாளின் முகம்வாடியது. பக்தியுடன் தான் கொடுத்தபாலை இவ்வாறு கொட்டி விட்டாரே என்று அவள் வருத்தமடைந்தாள். உடனே ஸ்ரீபாகண்ணதாஸர் அவள் கொண்டு வந்து கொடுத்த பாலால் ஸ்ரீ வேணுகோபாலமூர்த்திக்கு அபிஷேகமாகி விட்டதென்றும் சம்சயமிருந்தால் கோயிலிற்போய் பார்க்கலாமென்றும் சொல்ல அந்த அம்மாள் அப்படியே அங்கு போய் பார்க்க ஸ்ரீ வேணுகோபாலனுக்கு க்ஷீர அபிஷேகமாகி திருமேனியில் பால் பிந்துக்களிருப்பதைக்கண்டு மகா ஆச்சரியப்பட்டாள். ஸ்ரீ தாஸரவர்களின் தம்பிமார்களான சீனப்பதாஸர் சுப்பண்ணதாஸர் இவர்கள் தங்களை அழைத்துச் செல்லாமல் ஸ்ரீ பாகண்ணதாஸர் உடுபி யாத்திரை செய்ததைப்பற்றி வருத்தப்பட மறுமுறை ஸ்ரீ பாகண்ணதாஸர் அவர்களுடன் உடுபிசென்றார். அச்சமயம் அவர்களுடன் மாயாவாதிகள் வாதமாட அவர்களை ஜெயித்து ஸ்ரீ ஹரிஸர்வோத்தமத்வத்தை ஸ்தாபித்தார். ஒரு பிராம்மணர் அந்த தாஸர் அபரோக்ஷஞானி என்று சொல்லப்படுகிறாரே! அப்படியானால் தன்னுடை ஸ்வரூபம் என்னவென்று கேட்போமென ஸ்ரீ தாஸர்வாளை பிரச்னம் செய்தார். உடனே ஸ்ரீதாஸர்வாள் உன்னுடைய ஸ்வரூபம் காக்கை என்று சொன்னார். இதென்ன நான் காக்காயா! உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவர் அபரோக்ஷ ஞானி என்று ஒப்புக்கொண்டிருந்த ஸ்ரீவிஜயதாஸரிடம் போய் ஏ ஸ்வாமி! என் நிஜஸ்வரூபமென்ன! யாரோ என்னமோ சொல்லியிருக்கிறார். உண்மையைச்சொல்லுங்க” ளென்றார். ஸ்ரீ விஜயதாஸர் சிரித்துக்கொண்டு ஓய் பிராம்மணரே! ஸ்ரீபாகண்ணதாஸர் நீர் காக்காய் உம்முடைய ஸ்வரூபம் காக்காய் என்று சொல்லியிருக்கிறார். அது உண்மைதானென்றார். அபரோக்ஷ ஞானிகளான இவ்விருவர்களின் அற்புதமகிமையைக்கண்டு அந்த பிராம்மணன் மிகவும் ஆச்சரியப்பட்டான். ஸ்ரீ பாகண்ணதாஸர் மீண்டும் யாத்திரைக்காக புறப்பட்டு நிவிருத்திஸங்கமம் போய் அங்கு ஸ்நானம் செய்து கங்காதி ஸர்வபுண்ணிய தீர்த்த யாத்திரை

யையும் செய்து வந்தார். தக்ஷிண தேசயாத்திரை செய்யும்பொழுது ஸ்ரீ முஷ்ணம், ஸ்ரீரங்கம், அகோபலம், திருப்பதி, காஞ்சி, காளஹஸ்தி முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று அந்தந்தமூர்த்திகளை தரிசித்து அவர்ளின் பேரில் பல கீர்த்தனங்களை பாடினர். இவ்வாறு ஸ்ரீ தாஸரவர்கள் யாத்திரையை முடித்துக்கொண்டு ஊர் வந்து சேர்ந்தார். ஸ்ரீ தாஸர்வாள் ஸ்ரீமத்வ சித்தாந்தத்தை யொட்டி அநேக கீர்த்தனைகள் சுலாதிகள் உகாபோகம் முதலியவைகளைப் பாடியுள்ளார். ஸ்ரீ தாஸரவர்கள் தம் தம்பிமார்களின் வம்சத்தில் பிறக்கப்போவதாயும் தாம் கர்ப்பத்திலிருக்கும்போது தம்முடைய தாயார் மண்பாண்டத்திலேயே தண்ணீர் குடிக்கப்போவதாயும் தாம் ஜனித்து 12-வது வயதில் தம்முடைய குடும்பம் தாரித்ரயத்தால் மிகவும் கஷ்டப்பட இந்த ஜன்மத்தில், தம் தாயாரால் புதைத்துவைக்கப் பட்டிருக்கும் 4-பானை அரிசியை அச்சமயம் வெளியிலெடுத்து வினியோகம் செய்யப்போவதாயும் இப்படிப் பலவாறு பல பவிஷ்யத்வர்த்தமானங்களை அறிவித்தார். இந்த விஷயங்களெல்லாம் அவருடைய சிஷ்யரான வேணிஸோமபுரம் ஸ்ரீகிருஷ்ணதாஸர் கீர்த்தனை ரூபமாகவே வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீ பாகண்ணதாஸர் கணேசரின் அம்சமெனப் படுகிறது. அவருக்கு விவாகமே இல்லை. சுத்தபிரம்மசாரியாகவே காலங்கழித்தார். பாகண்ண என்று சொல்லும் மாத்திரத்திலேயே மகா புருஷார்த்தங்களுண்டாகும். பா என்றால் பக்தியைத்தந்து காயகிலேசம் நிவர்த்தியாகும். க என்றால் பவதூரமாகும். ண என்றால் முக்தி ஏற்படும். இவருடைய நாமம் ஒங்கார பூர்வகமாய் உச்சரிக்கப்படுமாகில் ஸ்ரீ பாரதிபதியான முக்யப்ராணர் த்ரிவிதலிங்கத்தைவிரஜையில் நிவிர்த்தி செய்து முக்தியைத் தருவாரென்பதில் ஆக்ஷேபணை இல்லை. விடியற் காலத்தில் இவருடைய திவ்விய சரித்திரம் படனம் செய்யப்படுமாகில் கேவலம் மந்தமதியும் மகா ஞானியாவான். இத்தகைய மகாமகிமையைக் கொண்ட ஸ்ரீ பாகண்ணதாஸரென்னும் கோபாலதாஸர் தம்முடைய அற்புதமகிமைகளை உலகில் பிரசித்திபடுத்தி சகம் 1565 சித்திரபானுஸம்வத்ஸரம் புஷ்யபகுள அஷ்டமி பானுவாரம் உத்தானூரில் இந்த மானுஷ சரீரத்தைத் துறந்தார். அவருடைய தேகவியோகமாகும்பொழுது வீட்டில் அவருடைய தம்பிமார்களில்லை. அவர்கள் வெளியிலிருந்து வீட்டிற்குள் பிரவேசிக்கும் சமயம் பளீரென்று ஓர் பெரும்ஜோதி மறைவதைக்கண்டு இதன் தத்துவத்தை தம்முடைய அண்ணாவைக் கேட்கலாமென அவஸரமாய் வந்து பார்க்க அண்ணாவின் சரீரம் பிராணவியோகமடைந்து கிடப்பதைக்கண்டு மகா துக்கமடைந்தனர். அச்சமயம் அவர்கள் பாடியதாவது:—



ராகம் ஸாவேரி, தாளம் சாப்.

பல்லவி.

அண்ண பாகண்ணநீ, கண்ணிகே மரேயாகி
புண்யலோக சேரித்யா:

அநுபல்லவி.

ஸண்ணவரு நாவு அனுகுண்ய நின்னயசரண
வன்னு பிட்டிரலாரேவோ, ஹேகுருவே.

சரணம்.

சிக்கந்திநிந்தபனு அக்கரதியமகே நீவு, திக்கெந் துநம்பித்தேவோ குருவே, மக்களாடிகெமாடி டக்கிலிநம்மனுபிட்டு போபது சரியே, குருவே, கக்கஸதயாதனெயு கரகரெய ஸம்ஸார பொக்கு கோடின்னரியேவோ, பக்கிவாகன நின்னசர தொய்தனே அகடதிக்கு கேடிகளாதேவோ. (1)

மனவிகதி ஹருஷவாதந்த மாதனு கேளி குணிவி குணிவி ஆடிஸவியோ குருவே, அனகா நிந்நந்த அண்ணன ஜன்மஜன்மக்கெனவாகி பயவிதிகுருவே, க்ஷணக்ஷணகே நீமாடிது பகாரவனு கெணது மணிதுநமோ நமோ எம்பெவோ, கனவிநந்தாயிதுதவ சர்யருபகள தெனவித ரெதிகி லெய்போதோ (2)

பூமஸகதாய குருராய நீ நல்லதலெ, பாரநாவா சிரயிவிலில்லவோ, தூரியதவனெல்லி நம்பிமான தொடய நீ பொரவ பாரவு நின்னதோ, பரிபரியவிதயகே பேளுவதேனுதவ சரண சுட்டபித்தேவோ வரதகோபால விட்டலனுத ஸாக்ஷிணியே வதகுசௌபாக்ய நிதியே, ஸ்ரீகுருவே,(3)

பிறகு அவர்கள் ஸ்ரீ பாகண்ணதாஸரின் சரணகமலங்களை ஸ்மரித்துக் கொண்டு எப்போதும் ஹரிபஜனை செய்துகொண்டு காலம் கழித்தனர். வேணிஸோமபுரம் ஸ்ரீ கிருஷ்ணதாஸர் ஸ்ரீ கோபாலதாஸரின் சிஷ்யராவார். ஸ்ரீ கோபாலதாஸரின் சரித்திரத்தை ஏதோ எனக்குத் தெரிந்தவரைநான் பெரியோர்களிடமிருந்து அறிந்துகொண்ட வரை அறிவித்திருக்கிறேன். இதேவிதமாகவே இதரதாஸர்வாளின் சரித்திரங்களையும் இந்த மித்திரன் வாயிலாய் மாத்வ உலகில் பரவச்செய்யலாமென்று எண்ணியிருக்கிறேன். என்னுடைய இந்த சின்ன கைங்கரியத்தை என்னுடைய குருமார்களும் பாரதீபதியும் ஸ்ரீ ஹரியும் ஏற்றுக்கொண்டு என் மனோபீஷ்டத்தை பூர்த்தி செய்து வைப்பார்களென்று பிரார்த்தித்து இந்த பரமபாகவதரான ஸ்ரீ கோபாலதாஸரின் சரித்திரத்தை இத்துடன் உபஸம்ஹாரம் செய்கிறேன்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

கும்பகோணம்,
28—7—31.

மைசூர் நரஹரிதாஸர்.

# ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமிகளின் லீலா விநோதங்கள்.

ஓர் பெரியார் அறிவிப்பதாவது:—

## I.

## ஆபரேஷன் பீஸ் வசூலித்தது.

தாராபுரத்து ஓர் மாத்வஸ்திரீயின் கண்ணில் உபாதி ஏற்பட்டு கண்ணின்மீது பெரியதொரு சதைக்கிளம்பி கண்தெரியாமற்போய் மிகுந்த வலியால் அல்லும் பகலும் வருந்திவந்தாள். அவள் பலவகை சிகித்ஸைகளைச் செய்துகொண்டும் குணப்படவில்லை. டாக்டர்களும் கைவிட்டுவிட்டனர். பிறகு அந்த அம்மாள் ஸ்ரீராகவேந்திரர் தான் தனக்குகதி என்றெண்ணி மந்திராலயம்வந்து சேர்ந்தாள். ஸ்ரீ ராகவேந்திரரின் அடிபணிந்தாள். தினம் துங்கபத்திரையில் ஸ்நானம் செய்து ஸ்ரீராகவேந்திரரின் பிருந்தாவனத்திற்கு பிரதக்ஷிணை நமஸ்காராதிகளைச்செய்து பக்தியுடன் சேவைசெய்துவந்தாள். ஒருவாரம் சேவை பெற்றபிறகு ஸ்ரீராகவேந்திரர் அவளுடைய சொப்பனத்தில் தோன்றி அடுத்த பானுவாரம் அவளுடைய கண்ணை ஆபரேஷன் செய்யப்போவதாய் அறிவித்தார். அந்த ஸ்வப்னத்தை அந்த அம்மாள் பொருட்படுத்தவில்லை. ஆனால் ஸ்ரீராகவேந்திரர்மட்டில் தான் சொன்னபடி பானுவாரத்தன்று விடியற்காலையில் அவளுடைய சொப்பனத்தில்தோன்றி அவளுடைய கண்ணின்மீது வளர்ந்திருந்த சதையை குத்திவிட்டார். அவள் விழித்தபின்பும் கண்ணை குத்தினவலி நீங்கவில்லை. கண்ணில் கரகரப்புமட்டிலிருந்துவந்தது. கண்ணிலிருந்து ஜலம் வடிந்துவந்தது. வலியுமதிகரித்தது. இவ்வாறு சுமார் 4, 5 நாட்களில் கண்ணிலிருந்து ஜலம்வடிந்துவடிந்து சதை கரைந்தது. மற்றொருநாள் ஸ்ரீராகவேந்திரர் சொப்பனத்தில்தோன்றி அந்த சதையின் மீது ஏதோ ஓர் துணியைக்கட்டி கையை மறைத்துவைத்துக்கொண்டிருக்கும்படி ஆக்ஞாபித்தார். அவ்வாறே அந்த அம்மாள் ஒன்றிரண்டு நாள் மறைத்துவைத்திருக்கவும் சதை எல்லாம் கரைந்து விரணம் சொஸ்தமாகி பார்வை நன்றாக ஏற்பட்டு பரமானந்தமடைந்தாள். ஸ்ரீராகவேந்திரரின் மகாமகிமையைக்கொண்டாடி ஹஸ்தோதகாதிகளைக் கொடுத்துவிட்டு தனது ஊருக்குப்போக சித்தமானபொழுது அன்றிரவில் சொப்பனத்தில் ஸ்ரீராகவேந்திரர் தோன்றி "பெண்ணே நான் செய்த ஆபரேஷனுக்கு பீஸ் எங்கே? அதைத்தராமல் எங்கு போகிறாய்" என்று கேட்டார். உடனே அந்தஅம்மாள் "ஸ்வாமி தாங்கள் எதைக் கேட்டாலும் நான் அதைத்தர சித்தமாயிருக்கிறேன்" என்றாள். அதற்கு ஸ்ரீராகவெந்திரர் "அப்படியானால் நீ கழுத்தில் போட்டுக்கொண்டிருக்கும் தங்கசெயின் சங்கிலியை கழற்றி எனக்குக்கொடு" என்று கேட்டு மறைந்தார். உடனே விழித்தெழுந்து அந்த அம்மாள் சொப்பனத்தைப்பற்றியே யோசித்திருந்தாள். அந்த அம்மாள் பரம



ஏழை, அவளுடைய புருஷன் ஸ்வல்ப சம்பளத்தில் அமர்ந்திருந்தான். ஆதலால் இதைத்தவிர அந்த அம்மாளுக்கு விசேஷமான நகை ஒன்றும் இல்லை. ஆயினும் ஸ்ரீராகவேந்திரரின் ஆக்ஞை ஏற்பட்டதால் மிகுந்த ஆனந்தமடைந்து அந்த நகையை ஸ்ரீராகவேந்திரரிடம் ஸமர்ப்பித்துவிடவும் அர்ச்சகர்கள் அந்த நகையால் அன்று ஸ்ரீ ராகவேந்திரரை அலங்கரித்தனர். அன்றிரவு அந்த அம்மாளின் சொப்பனத்தில் மற்றொரு யதீசுவரர் தென்பட்டு "அம்மா! டாக்டருக்கு பீசு கொடுத்துவிட்டாய். என் பீசு எங்கே" என்றார். அதற்கு அந்த அம்மாள் "நீங்கள்யார், எனக்குத்தெரியவில்லையே" என்றாள். அதற்கு அந்த யதீசுவரர் "அம்மா! நான் கம்பவுண்டர். ஸ்ரீ ராகவேந்திரரிடம் வேலைக்கு அமர்ந்திருக்கிறேன். என்பெயர் வாதீந்திரர். உன் கண் ஆபரேஷன் செய்யும்பொழுது நான் மருந்துகளை தயாரித்துக்கொடுத்திருக்கிறேன். ஆதலால் என் பீசையும் எனக்குக் கொடுத்துவிடு" என்று அறிவித்தார். அதற்கு அந்த அம்மாள் "ஸ்வாமி தங்களுக்கு பீசு கொடுக்க வேண்டியதுதான். நான் மிகுந்த ஏழையாயிற்றே. தங்களுக்கும் பீசு தர எனக்கு சக்தியில்லையே! நான் என்ன செய்வேன்" என்று சொல்ல ஸ்ரீவாதீந்திரர் "உனக்கு எவ்வளவு கொடுக்கமுடியுமோ அவ்வளவு கொடுத்தாற் போதுமானது. அவ்வளவு இவ்வளவு என்று நிர்பந்தமில்லை. என்னை மறந்துவிடாதே" என்று சொல்லி மறைந்தார். மறுநாள் அந்த அம்மாள் ஸ்ரீராகவேந்திரரின் பிருந்தாவனத்திற்குப்பக்கத்தில் பிருந்தாவனஸ்தராயுள்ள ஸ்ரீவாதீந்திரருக்கும் சொற்ப திரவியத்தை ஸமர்ப்பித்துவிட்டு "சகல சித்திகளையும் பெற்று ஸர்வாபீஸ்டங்களையும் பக்தர்களுக்கு வர்ஷித்துவரும் ஸ்ரீராகவேந்திரருக்கு என்னுடைய செயின்சங்கிலி ஒன்று பாக்கியிருந்ததா என்ன! ஆகா! இது அவருடைய ஓர் லீலையேயாகு" மென்று சொல்லிக்கொண்டு பரமானந்தத்துடன் தன்னுடைய இருப்பிடத்திற்குப்போய்ச்சேர்ந்தாள்.

## II

## தாஸியின் சால்வையை வேண்டியது.

ஸாரபுரத்து பணக்காரி தாஸி ஒருவள் பெரும் வியாதியால் மிகுந்தக்கஷ்டப்பட்டுக்கொண்டு கைகால் விரல்களெல்லாமழுகிப்போய் நீர்வடிந்துக்கொண்டு மிகவும் சிரமப்பட்டுவந்தாள். இந்த உபாதிக்குச் சரியான சிகித்ஸை இல்லாமலிருப்பதை அறிந்து மந்திராலயம்வந்து ஸ்ரீராகவேந்திரரை சரணம்புகுந்தாள். அவள் வெகுகாலம் ஸ்ரீராகவேந்திரரை ஸேவித்துவர ஸ்ரீராகவேந்திரர் சொப்பனத்தில் தோன்றி பிரத்யக்ஷமாய் கையில் ஓர் பச்சிலை மருந்து உருண்டையைக் கொடுத்தார். அந்த தாஸி விழித்துப் பார்க்கையில் கையில் மருந்து உண்டை இருந்தது. ஸ்ரீராகவேந்திரர்தானிதைத்தந்திருப்பதாய் நிச்சயித்து மிகுந்த பக்தியுடனதை உட்கொண்டு ஸேவை செய்துவர நாளுக்கு நாள் அவளுடைய உபாதி குணமடைந்து சிலகாலத்திற்குப்பின் உபாதி பூர்ணமாயும் நீங்கிவிட்டது. அந்த தாஸி மிகவும் சந்தோஷமடைந்து

ஸ்ரீராகவேந்திரருக்கு எராளமான பணங்களைச் செலவழித்து பலவகை கைங்கரியங்களைச் செய்தாள். முடிவில் ஸ்ரீ ராகவேந்திரர் ஒருநாள் அவளுடைய சொப்பனத்தில் தோன்றி "ஸ்திரீயே! நீ செய்துவரும் விசேஷமான கைங்கரியத்தால் எனக்கு திருப்திதான் ஆயினும் நான் வேண்டுவது ஒன்று உண்டு, அதை நீ தருவாயா" என்றார் அதற்கு அந்த தாஸி "ஸ்வாமி நான் அவசியம் தருகிறேன். தாங்கள் கேட்கலாம்" என்று சொன்னாள். ஸ்ரீ ராகவேந்திரர் "வேறு ஒன்றும் வேண்டாம், நீ போர்த்துக்கொண்டிருக்கும் சால்வையை எனக்குக் கொடு" என்று சொல்லி மறைந்தார். அந்த தாஸி இந்த சொப்பனத்தின் அபிப்பிராயம் விளங்காமல் நான் போர்த்துவரும் இந்த பழைய சால்வையை ஸ்ரீ ராகவேந்திரர் வேண்டுவதாவது என்று சொல்லி அந்த சொப்பனத்தை பொருட்படுத்தவில்லை. இரண்டு நாள் கழித்து மீண்டும் ஸ்ரீ ராகவேந்திரர் சொப்பனத்தில் தோன்றி "ஸ்திரீயே உன்னுடைய சால்வையைக் கொடுக்க உனக்கிஷ்டமில்லையா? ஏன் தயங்குகிறாய்" என்றார் அதற்கு அந்த தாஸி "ஸ்வாமி! தங்களுக்கேனிந்த பழைய சால்வை. மேலும் நான் அநேக துஷ்கிருத்யங்களைச் செய்தவள். நான் தரித்துவரும் இந்த பழைய சால்வையை தங்களுக்கு நான் எப்படி கொடுப்பேன்? தங்களுக்கு விருப்பமிருந்தால் ரூ. 500, 1000 பொருமானமுள்ள புதிதான சாதராக்களை வரவழைத்து ஸமர்ப்பிக்கிறேன்" என்று சொன்னாள். ஸ்ரீ ராகவேந்திரர் "எனக்கு அதெல்லாம் வேண்டாம். இந்த உன் சால்வைதான் எனக்கு வேண்டும் உடனே கொடு" என்று சொல்லி மறைந்தார். மறுநாள் அந்த தாஸி இந்த சொப்பனத்தை அர்ச்சகாளிடமறிவித்து தன்னுடைய அந்த பழைய சால்வையைப் பெறும்படி வேண்ட அவர்கள் அந்த தாஸியை திக்கரித்து க ரமாய்ப் பேசினர். அன்றிரவு ஸ்ரீ ராகவேந்திரர் அர்ச்சகரின் சொப்பனத்தில் தோன்றி "ஏனடா! அந்த ஸ்திரீயை திக்கரிக்கிறாய், எனக்கு அந்த சால்வை வேண்டுமென்றுதான் அந்த ஸ்திரீயைக் கேட்டேன். புதிதாயிருந்தாலென்ன பழையதாயிருந்தாலென்ன? உங்களுக்கென்ன நான்தானே போர்த்துக்கொள்பவன் எனக்கு குளிருகிறது, உடனே அதை வாங்கி எனக்குப் போர்த்துவிடு" என்றறிவித்தார். அர்ச்சகர் என்ன செய்வார் பாவம். ஓர் தாஸி போர்த்துக்கொண்டிருந்த பழைய சால்வையை பரமபாவனமான பிருந்தாவனத்தின் மீது எவ்வாறு சமர்ப்பிப்பது என்று அருவருப்பு கொண்டனர். ஸ்ரீ ராகவேந்திரரின் ஆக்ஞை ஸ்பஷ்டமாய் ஏற்பட்டிருப்பதால் அதை மீறவும் இவர்களுக்கு தைரியம் ஏற்படவில்லை. இதைப்பற்றி ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமி மடாதிபதியிடமறிவித்து அவருடைய ஆக்ஞைப்படி நடக்க முடிவு செய்துகொண்டு ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு மனுஷ்யாள் மூலம் இந்த செய்தி சொல்லியனுப்பி ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையை எதிர்பார்ப்பதாய் அறிவித்தனர். என்றைக்கு அந்த தூதன் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் வந்துசேர இருந்தானோ அதற்கு முந்திய நாள் விடியற்காலையில் ஸ்ரீ ஸ்வாமிகளின் சொப்பனத்தில் ஸ்ரீ ராகவேந்திரர் தோன்றி "எனக்கு இவ்வளவு சொத்துக்களிருந்தும் நான் போர்த்துக்கொள்ள சால்வை ஒன்று இல்லாமலிரு



ப்பது ஆச்சரியமே. எனக்கோ குளிருகிறது" என்று சொல்லி மறைந்தார் ஸ்ரீ ஸ்வாமிகள் மந்திராலயத்திற்கு ஆளை அனுப்பி ஸ்ரீ ராகவேந்திரருக்கு நல்ல சால்வையை ஸமர்ப்பிக்கவேண்டுமென்று யோசித்திருக்கையில் அர்ச்சகாள் அனுப்பிய தூதன் வந்து ஸாரபுரத்து தாஸியின் பழைய சால்வையைப் பெற சொப்னமாயிருப்பதை அறிவித்து ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையென்னவென்று கேட்டான் ஸ்ரீ ஸ்வாமிகள் தாம் கண்ட சொப்பனத்தை அறிவித்து இனி ஒரு க்ஷணமும் ஆலஸியம் செய்யாமல் அந்த சால்வையையே போர்த்துவிடும்படி ஆக்ஞாபித்தார். அந்த ஆக்ஞையின்படி அர்ச்சகாள் அந்த தாஸியிடமிருந்து பழைய சால்வையைப் பெற்று ஜலத்திலதை தோய்த்து காயப்போட்டு அதை ஸ்ரீ ராகவேந்திரரின் பிருந்தாவனத்தைச் சுற்றிப் போர்த்தி விசேஷமான பூஜையை நடத்தினர். ஸ்ரீ ராகவேந்திரரிடம் பரமபக்திகொண்ட அந்த தாஸி தன்னுடைய பழைய சால்வையை இவ்வளவு மன்றாடிப் பெற்று ஆனந்தமாய் விளங்கும் ஸ்ரீராகவேந்திரரைக் கண்டு ஆனந்த ஸாகரத்தில் மூழ்கி மெய்மறந்து ஆனந்த பாஷ்பம் பெருக விட்டுக்கொண்டு "ஹே முனீந்திரா! ஹே ராகவேந்திரா! சற்குருவே! என்ன தங்களுடைய கருணை, மகாபாபியாய் பரம துஷ்கிருத்யங்களைச் செய்துவந்த என்னிடம் எப்பேர்ப்பட்ட மகாப்ரஸாதத்தைத் தந்தருளியிருக்கின்றீர். நான் எம்மாத்திரம், ஸ்வாமின், என் தீரா வியாதியை தீர்த்தீர். எனக்கு ப்ரத்யக்ஷமாய் மருந்தருளித்தீர், என் சொப்பனத்தில் பல தடவை தரிசனமளித்தீர். என் பாவங்களை எல்லாம் தொலைத்தீர். இது ஸத்யமென்பதை உலகத்தாருக்கு நிதர்சனமாய்க் காட்ட என் பழைய சால்வைக்காக பலர்களுக்கு பலவகை சொப்பனங்களைக்காட்டி அதைப் பெற்று போர்த்திக்கொண்டு ஆனந்தமாய் வீற்றிருக்கிறீர். இது தங்களுக்கோர் லீலையோ. தங்களுடைய ஸ்வாமி ஸ்ரீய:பதியான ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் குசேலரின் கக்கத்து வியர்வையில் தோய்ந்த மூன்று பிடி அவலை பலாத்காரமாய்ப் பெற்று எவ்வளவு ஆனந்தமாய் உண்டார். தயிர் பால் வெண்ணை ஸமிருத்தியாகவுள்ள தனது தந்தை நந்தகோபனுடைய கிருகத்திலிருந்து வெளிக்கிளம்பி கோபிகைகளின் இருட்டு அறைகளில் நுழைந்து நுழைந்து பலவகை உபாயங்களால் வெண்ணை முதலியவைகளைத் திருடி அவர்களால் விரட்டியடிக்கப்பட்டு சிறித்துக்கொண்டு ஆனந்தமாய் ஓடி ஒளிந்தார். உம்முடைய பதி ஸ்ரீ ராமச்சந்திரன் சபரியின் எச்சில்பட்ட பழங்களை தின்றார். நீசர்களிலும் நீசஸ்திரீயான என்னை தாங்கள் தங்கள் பக்திகோடிகளில் சேர்த்துவிட்டீர்போலும். இந்த பரமோபகாரத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்வேன், தங்களுடைய திருவடிகளில் அநந்தாநந்த ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறேன். ஜன்மஜன்மத்திலும் தங்களிடம் எனக்கிணையற்ற பக்தியிருக்கட்டும், எனக்கு நற்கதியேற்பட தங்கள் அருள் எனக்கு ஏற்படவேண்டும்." என்றிவ்வாறு பலவகை ஸ்தோத்திரம் செய்து தன்னுடைய இருப்பிடம் சேர்ந்தாள். 'அகம்யமகிமாலோகே' என்று ஸ்ரீ அப்பண்ணாச்சாரியார் சொன்னபடி ஸ்ரீ ராகவேந்திரரின் மகிமை அறியமாளாததுதான்.

# மாத்வமித்திரனின் நான்காவது வருடாரம்பம்.

ஸ்ரீ ஹரிகுரு கிருபையாலும், எம்மிடம் மிகுந்த அன்புகொண்டிருக்கும் எமது சந்தாதார நேயர்களின் ஆதரணையாலும் இம்மித்திரன் தனது மூன்றாவது வருடத்தை நிர்விக்னமாயும், வெகு சிறப்பாயும் முடித்துக்கொண்டது. இவர்களுக்கு எம்முடைய மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகின்றோம். இவ்வருடத்தில் இம்மித்திரனின் நற்பெயர் தென்னாட்டிலெங்குமே ஒவ்வொரு சிறு கிராமத்திலும்கூட மிகவும் பிரஸித்தியடைந்திருக்கிறது. எமது மித்திரன் செய்துவரும் மதசேவையை பாராட்டாதார் இத்தென்னாட்டில் மாத்வர்களில் யாருமில்லை எனலாம். பல மடாதிபதிகளும்கூட பகிரங்கமாய் வாய்விட்டு இம்மித்திரன் புரிந்துவரும் சாஸ்திர பிரசார வேலையை வெகுவாய் கொண்டாடி வருகின்றனர். இம்மித்திரனின் நற்பாக்யத்தால் இதன் பிரசுர ஸ்தலமாகிய கும்பகோணத்திலேயே த்வைத - மதாசாரியாளாகிய ஸ்ரீ உத்தராதி மடம் ஸ்வாமிகளுக்கும் பிரபலமான அத்வைத பண்டிதர்களுக்கும் த்வைதாத்வைத ஸம்பந்தமாய் பலமான விவாதம் நடைபெற்று அதில் அத்வைத மதத்தின் பிரதான கொள்கையாகிய ஜீவேசுவர அபேதத்தை அத்வைதிகள் நிரூபிக்க முடியாமல் சபையிலிருந்து எழுந்துபோய் த்வைத மதத்திற்கே வெற்றி ஏற்பட்டதால் த்வைத மதத்தைப் பிரசாரம் செய்வதே பிரதானமான நோக்கங்கொண்ட இம்மித்திரன் தனது கடமையை நன்குணர்ந்து அதை சரியானபடி செலுத்தி அதன் ஸம்பந்தமான ரிப்போர்ட்டை தமிழிலெழுதி அதை பெரிய புத்தகமாக்கி இலவசமாய் எங்குமனுப்பி நற்கியாதி பெற்றது. அதனால் எதிரிகளான மத வெறிகொண்ட சில அத்வைதிகளின் கோபத்திற்கும், ஆக்கிரத்திற்கும் இம்மித்திரன் வசமாயிற்று. இம்மித்திரனின் ஆசிரியரின் உயிருக்கே அபாயம் நேரிடப்போகிறதென்று பயங்கரமான பிரசுரங்களும் வெளியாயின. த்வைத மதத்தின் மீது அத்வைத மதத்தின் பத்திரிகை வெளியிடும் தூஷணைகளுக்கு சரியானபடி பதிற்கூற மாத்வர்களின் சார்பாக இம்மித்திரனே விளங்கி வருகிறதேயென்று பலர் சிலாகித்து அந்தந்த சமூகத்தாருக்கு திறமை வாய்ந்த ஓர் பத்திரிகை இருந்துவர வேண்டியதின் அவசியத்தை கண்டுகொண்டனர். இம் மாத்வமித்திரன் ஆதியில் எதிர்பார்த்தபடி தனது உண்மையான உழைப்பால் பல நோக்கங்களை பூர்த்திசெய்துகொண்டதாயினும் அதற்கு போதுமானவளவு திரவிய பலமில்லாமல் தத்தளிக்கிறதென்பதை நாம் மிகவும் வருத்தத்துடன் அறிவிக்கின்றோம். இம் மித்திரன்



கேவலம் சந்தாதாரர்களின் சந்தா தொகையால்தான் நடத்தப்பட்டு வருகிறதென்று நாம் பன்முறை அறிவித்திருப்பதை நம் சமூகத்து பிரமுகர்கள் மறந்து சாமானியர்களைப்போலவே சந்தா தொகை ரூ. மூன்றை மட்டில் எமக்கனுப்பி உதவுகின்றனர். நடுத்தர அந்தஸ்துள்ள ஆஸ்திக சந்தாதாரர்கள் தாம் பெறும் இம் மித்திரனை மாதாமாதம் தாம் படித்தவுடன் தாராளமாய் எல்லோரும் படிக்க கொடுக்கின்றனர். பொருளாதாரத் தொல்லையால் வருந்தும் ஸாமானியர்கள் தங்களுக்கு எப்படியும் இம் மித்திரன் கிடைக்கிறதென்று சந்தாதாரர்களின் ஜாபிதாவிலிருந்து நாளடைவில் அவரவர்கள் விலகி விடுகின்றனர். ஏராளமாய் திரவியம் படைத்த மடாதிபதிகள் வெகுவாய் இம்மித்திரனுக்கு திரவிய ஸகாயம் செய்வதாய் வாக்கு தானம் செய்கின்றனரேயன்றி இதுவரை இம்மித்திரனுக்கு திரவிய ஸஹாயம் செய்தவர் யாருமில்லை. பொதுவாய் இன்னமும் எமது மாத்வ ஸமூகத்தில் ஸரியான மனப்பற்றும், திடசித்தமும், ஸமரஸ புத்தியும், ஸகோதர பான்மையும் ஏற்படவில்லை எனலாம். ஸ்வல்ப ஸங்கியை கொண்டு பலவகை கஷ்டங்களால் வருந்தும் இம் மாத்வ ஸமூகத்திற்குள் வகுப்பு வாதங்கள் இன்னமும் ஒழியவில்லை. மடத்துச் சண்டை நீங்கவில்லை. தேசஸ்தனென்றும் கர்டைகனென்றும், உத்தராதி மடத்தானென்றும், வியாஸராஜ மடத்தானென்றும் இத்தகைய பேதபுத்தி இன்னமும் சில ஆஸ்திக ப்ரமுகர்களின் மனதிலிருந்து விலகவில்லை. இந்த ந்தரத்தை அறிந்துகொண்டு கலகத்தை வளர்த்தி பணத்தை பறித்து கெக்கலி கொட்டும் விஷமிகளின் கொக்கரித்தல் சமூகத்தை பிளவு படுத்தவே எத்தனிக்கிறது. ஸமரஸத்திற்காக பாடுபடுகிறவர்களின் பாடெல்லாம் பாழாய்ப் போகிறது. சாத்தியப்பட்டவரையில் ஸமூக சேவை செய்வதும், பிரதானமாய் ஸ்ரீ மத்வமத சித்தாந்தங்களை தமிழில் ஸாமானியர்களுக்கு புகட்டுவதுமாகிய நோக்கத்தைக்கொண்ட இம் மித்திரனிடம் மாத்வப்ரமுகர்களில் சிலர் ஔதாசீன்யத்தைக் காட்டவாரம்பித்திருக்கின்றனர். இதனால் எமது மித்திரனின் உத்தமமான ஸ்ரீமத்வ சாஸ்திர பிரசார வேலை தடைபடுமென்பதை அவர்களறிந்துகொள்ளவில்லை. இப்படிப் பலவகையில் கஷ்டத்திற்குள்ளாகி பணத்தின் நெருக்கடி ஏற்படவும் இம் மித்திரனை இனி நடத்துவது அசாத்தியமென்றெண்ணி சென்ற சஞ்சிகையுடன் இதை நிறுத்திவிடுவதாகவே யோசித்திருந்தோம். ஆனால் பல மதகிரந்தங்களை அவைகளில் முக்யமாய் எல்லா ப்ரமேயங்களுமடங்கிய ஸ்ரீ பகவத்பாதாளின் அரிய நூலாகிய ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தை பூராவும் தமிழில் வெளியாக்க முடியாமற்போகி

றதே என்ற வருத்தம் மேலிட்டு இம்மித்திரனுக்கு வருஷா வருஷம் இத்தகைய சங்கடம் ஏற்படாமலிருக்க தகுந்த எத்தனங்களை இவ்வருடத்தில் செய்து பார்க்கலாமெனத் துணிந்து இவ்வருடத்தில் எமது மித்திரனை நடத்த நிச்சயித்திருக்கிறோம். இம்மித்திரன் சாசுவதமாய் நடைபெற புதுக்கோட்டை ஸ்ரீமான் N. சஞ்சீவ ராவ், M. A., L. T. ஓர் திட்டத்தை அறிவித்துள்ளார். இப்பத்திரிகை மாத்வமித்திரன் கம்பெனியாரின் மானேஜ்மெண்டில் நடத்தப்படவேண்டுமென்றும், ஷேர் 1 க்கு ரூ. 50 விதம் குறைந்தபக்ஷம் 100 ஷேர்ஹோல்டராவது அந்த கம்பெனியிலிருக்கவேண்டுமென்றும், ஷேர் தொகை ரூ. 50ஐ 10 தடவையில் ஷேர் ஹோல்டர்களிடமிருந்து சுலபமாய் வசூலிக்கப்படலாமென்றும், இந்த ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டால் 5 ஷேர்களை தான் எடுத்துக்கொள்ள சித்தமாயிருப்பதாயும் அதில் கண்டிருக்கிறது. எமது சமூகத்திலுதித்த ஆஸ்திக சிரோரத்னங்களும் பாக்யவான்களும் ஸ்ரீ பகவத்பாதாளிடமுள்ள பரமபக்தியாலும் ஸாமானியமான மாத்வசகோதரர்களிடமுள்ள கருணையாலும் தியாக புத்தியை மேற்கொண்டு மேற்கண்ட விதமாயுள்ள ஓர் வகை ஏற்பாட்டிற்கிணங்கி இவ்வருடத்தில் எமது மித்திரனுக்கு ஓர் சாசுவதஸ்தானத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம். எமது சந்தாதார நேயர்களொவ்வொருவரும் ஸ்ரீ பகவத்பாதாளின் கைங்கரியமெனஎண்ணி அவரவர்களின் நண்பர்களை ஸ்பர்சப்படுத்தியாவது அவரவர்களை இம்மித்திரனுக்கு சந்தாதாரராய்ச் சேரும்படி பிரேரிபிக்க வேண்டுமென மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

## விசேஷ தினங்கள்.

30-8-31. பானுவாரம் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் புண்யதினம்.
4-9-31. சுக்ரவாரம் கோகுலாஷ்டமி, இராத்திரி பூஜை.
5-9-31. சனிவாரம் பாண்டுரங்கி, ஸ்ரீமுஷ்ணம், ஆத்யம், ஸ்ரீஉத்தராதி மடத்தார் ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடத்தாருக்கு இரவு 7-24க்குமேல் பாரணை. ஸ்ரீவியாஸராஜ மடத்தாருக்கு காலையில் பாரணை.
8-9-31. மங்களவாரம் ஏகாதசி.
11-9-31. சுக்ரவாரம் அமாவாசை, திலதர்ப்பணம்.
15-9-31. மங்களவாரம் விநாயக சதுர்த்தி.
16-9-31 புதவாரம் ரிஷிபஞ்சமி.
20-9-31 பானுவாரம் ஸ்ரீஜகன்னாத தாஸரின் புண்யதினம்.
22-9-31 மங்களவாரம் ஏகாதசி.
25-9-31 சுக்ரவாரம் அனந்த விரதம்.
26-9-31 சனிவாரம் பௌர்ணமி, வி. உபவாசம், சந்திர கிரஹணம்.

DIGITIZED